DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
i HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

HomeLife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative — kailain.thillai@gmail.com
Ragu Thillainathan, Sales Representative — homesbyraghu@gmail.com

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய
எம்மை அழையுங்கள்
416-752-1524

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
PROPERTY MAX Realty Inc. Brokerage
THE PULSE OF PROPERTIES
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam, Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail: raj.p@rogers.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran, Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam, Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
# உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1551 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 26, 2025

## கனடிய தமிழ்த் தொலைக்காட்சி நிறுவனமான "தமிழ்வண்" தனது 20வது ஆண்டு நிறைவு விழாவை மனித நேயத்திற்கு மதிப்பளிக்கும் வகையில் ஏற்பாடு செய்திருந்தது!



கனடாவில் நன்கு அறியப்பெற்ற தமிழ்த் தொலைக் காட்சி நிறுவனமாகவும் அர்ப்பணிப்புள்ள ஒரு ஊடகமாகவும் விளங்கும் "தமிழ்வண்" தனது 20வது ஆண்டு நிறைவு விழாவை நேர்த்தியான முறையிலும் மனித நேயத்திற்கு மதிப்பளிக்கும் வகையிலும் ஏற்பாடு செய்திருந்தது!!

கடந்த 20-12-2025 அன்று சனிக்கிழமை மாலை ஸ்காபுறோவில் அமைந்துள்ள மெற்றொபொலிட்டன் விழா மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி விழாவை எஸ்.வி மீடியா மற்றும் வணக்கம் தொலைக்காட்சி ஆகிய சகோதர இலத்திரனியல் ஊடகங்கள் இணைந்து நடத்தின. (தொடர்ச்சி 4ம் பக்கம்)

## RE/MAX Ace Realty Inc. Brokerage வீடு விற்பனை முகவர் நிறுவனம் சிறப்பாக நடத்திய வருடாந்த விற்பனை விருதுகள் வழங்கும் வைபவம்!



கனடாவில் தமிழர்களால் நிர்வகிக்கப்பெறும் வீடு விற்பனை முகவர் நிறுவனங்களில் நன்கு அறியப்பெற்ற ஒன்றாக விளங்கும் **RE/MAX Ace Realty Inc. Brokerage** நிறுவனம் 21-12-2025 ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடத்திய வருடாந்த விற்பனை விருதுகள் வழங்கும் வைபவத்தில் முக்கிய அம்சமாகவும் போற்றக்கூடிய ஒரு சமூகப் பணியாகவும் குறிப்பிடக்கூடியதாக ஸ்காபுறோவில் மிக விரைவில் அமையவுள்ள "தமிழர் சமூக மையத்தின்" கட்டட நிதிக்காக சுமார் 20 வீடு விற்பனை முகவர்கள் தலா 10 ஆயிரம் டாலர்கள் வீதம் வழங்கி தங்கள் சமூகத்திற்கும் தாங்கள் சார்ந்த வீடு விற்பனை முகவர் நிறுவனத்திற்கும் பெருமையைச் சேர்த்துக் கொண்டார்கள். (தொடர்ச்சி 17ம் பக்கம்)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7 — 905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 — 905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851

WISHING YOU AND YOUR FAMILY A

# MERRY CHRISTMAS

AND
A HAPPY NEW YEAR.

இனிய நத்தார்
மற்றும்
புத்தாண்டு வாழ்த்துக்கள்
தங்களுக்கு
உரித்தாகுக!



# Martin Medeiros

Regional Councillor Wards 3 & 4
City of Brampton

martin.medeiros@brampton.ca
(905) 874-2634



Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 | Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# வேதனைகளை எமக்குத் தந்து விட்டு விரைவாக இறுதி நாளை நெருங்கும் 2025 வருடத்திற்கு எவ்வாறு கையசைத்து விடைகொடுப்பது?!

இரண்டாயிரத்து இருபத்தைந்துக்கு விடைகொடுக்கத் தயாராகின்ற போது. வெளிச்சத்திற்குப் பதிலாக இருளும் உற்சாகத்திற்குப் பதிலாக உருகுகின்ற நெஞ்சங்களுமாக எம்மை சிறைபிடித்திருப்பதை உணர்கின்றோம். இது நூற்றுக்கு நூறு வீதம் நிஜமானது என்பதை நீங்களும் உணர்ந்து கொள்வீர்கள். நாங்கள் விடை கொடுக்கவுள்ள 2025ம் ஆண்டு உலகின் பல நாடுகளிலும் எமது தாயக மண்ணிலும் அதே போன்று “மாங்கனித்தீவு“ என்று உலகத்தவர் போற்றி நிற்கும் அழகிய அந்த தேசம்., எமது பத்திரிகையை நாம் வெளியிடும் கனடிய தேசம் ஆகிய நாடுகளில் நாம் கடந்து வந்த இந்த ஆண்டில் புத்துணர்வு மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றுக்குப் பதிலாக பின்னடைவுகளும் இயற்கையின் அனர்த்தங்களும் பல நாடுகளில் யுத்தங்களினால் இலட்சக்கணக்கான உயிர்களும் பெருமதியான உடமைகளும், இழக்கப்பட்டு கண்ணீரும் அழுகையுமாக நாம் விரைந்து நகரும் இந்த ஆண்டுக்கு விடை கொடுக்கின்றோம்.
உக்ரேன் மற்றும் பாலஸ்தீனம் போன்ற நாடுகளில் மனநோயாளர்களை தலைவர்களாகக் கொண்ட தேசங்களின் இராணுவமும் அவற்றின் தளபதிகளும் எக்காளமிட்டு அப்பாவி மக்களை அழித்தும் அவர்கள் நிலங்கைளப் பறித்தும் நடத்தி வரும் கொடுமைகள் இன்னும் தணிந்து விடவில்லை.

உலகிற்கு தன்னை எசமானாகக் காட்டிக் கொள்ளும் தேசத்தின் தலைமையிடம் எது இருக்க வேண்டுமோ அது காணப்படவில்லை. அதனால் உலகெங்கும் அச்சுறுத்தல்.உலகப் பொருளாதாரம் தொடர்பான ஒரு அச்ச உணர்வை ஏற்படுத்து வகையிலான அறிவிப்புக்கள் அடுத்தடுத்து வந்தவண்ணம் உள்ளன அந்த தேசத்தின் தலைமை மாளிகையிலிருந்து..
எமது தாய் மண்ணிலும் எமது உறவுகள் உழைப்பவர்களாக விளங்கும் மலையகத்திலும் ஏனைய பெரும்பான்மை மக்களும் இஸ்லாமிய சகோதர சகோதரிகளும் குழந்தைகளும் அனைவருமாக வெள்ளப்பெருக்கினாலும் கொடிய காற்றாலும் தாக்கியழிக்கப்பட்ட அந்த காட்சிகள் இன்றும் மறைந்து விடவில்லை.
அங்கு வீடற்றவர்களாகவும் குடும்பத் தலைமைகளை பறிகொடுத்தவர்களாகவும் ஒரு உணவு கிடைப்பதே சிரமம் என்று காய்ந்த வயிற்றோடு காத்திருக்கும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிக் கரங்கள் பல தேசங்களிலிருந்தும் நீட்டப்படுவது சற்று ஆறுதலைத் தந்த வண்ணம் உள்ளது.
கனடா உதயன் மலரும் நாடான பனிபெய்யும் தேசத்திலும் பொருளாதார நிலைமை சீராக இருக்கவில்லை. எமது தமிழ்ச் சமூகத்தில் ஆயிரக்கணக்கானவர்கள் தங்கள் தொழிலாக வரித்து கொண்டு வீடு விற்பனைத்துறை என்பது சரிந்து கிடக்கின்றது இந்த ஆண்டில் முழுமையாக.

அதனால் அரசாங்கமே சலித்துப் போன நிலையில் பொருளாதாரத்தை நிமிர்த்த முயலுகையில் அருகிருக்கும் தேசத்திலிருந்து வந்த “அறிவிப்புக்கள்“ மேலும் இந்த மண்ணை அசைத்து நின்றன.
உலகெங்கும் பொருளாதாரத்தின் அத்திவாரத்தை சிதைத்து விட்டபடியும். இயற்கை அனர்த்தங்களை பொங்கியெழச் செய்தும். உணவு உற்பத்தி வளங்களை வெள்ளத்தில் மூழ்கடித்தும் எம்மைவிட்டு விலகிச் செல்லும் இந்த 2025இற்கு இயல்பாகவே நாம் விடைகொடுப்போம். அத்துடன், மீண்டும் துன்பங்களும் தோல்விகளும் இழப்புக்களும் சூழ்ந்து விடாமல் இருக்க நாம் பிராத்தனைகள் செய்திடுவோம்!.

வசந்தம் தமிழ் உளவளத்துணை நிலையம்
VASANTHAM TAMIL WELLNESS CENTRE
PRESENTS
சமூக உளவளம் பேணும் தொடர் - 107
Psychosocial Educational Series-107

VASANTHAM HEALTH & WELLNESS CENTRE

5 January 2026 (Monday)
Canada EST: 7:00pm - 9:00 pm U.K: 12:00 am - 2:00 am
Sri Lanka: 5:30a.m - 7:30am (Tuesday)

Zoom ID: 918 584 6813
No Password
Dial by Phone: 647 374 4685
647 558 0588

திருமந்திரம் கூறும் நல்வாழ்வுக்கான மூச்சுப் பயிற்சிகள்



Dr. Sundar Balasubramanian
Cell Biology Researcher, Founder of PranaScience Institute

ஒவ்வொரு முதலாம் மூன்றாம் திங்கட்கிழமைகளில் எங்களுடைய சூம் தொடரில் இணைந்துகொள்ளுங்கள்

Join us via zoom: CLICK HERE or go to link below in the email



Hosted by
Parvathy Kanthasamy
CONTACT US: 416-847-4172
VASANTHAM
VASANTHAM-TAMIL WELLNESS
VASANTHAMW
647-374-4685
VASANTHAM.CA

## Condo Townhouse for Rent

2+1 bedrooms - New Condo Townhouse for rent.
Close to bus stop, school and shopping. Available immediately.
Call 647-201-8784



கனடிய செய்திகள் Canadian News

# கனடிய தொலைக்காட்சி நிறுவனமான "தமிழ்வண்" தனது 20வது ஆண்டு நிறைவு விழாவை மனித நேயத்திற்கு மதிப்பளிக்கும் வகையில் ஏற்பாடு செய்திருந்தது!

கனடாவில் நன்கு அறியப்பெற்ற தமிழ்த் தொலைக் காட்சி நிறுவனமாகவும் அர்ப்பணிப்புள்ள ஒரு ஊடகமாகவும் விளங்கும் "தமிழ்வண்" தனது 20வது ஆண்டு நிறைவு விழாவை நேர்த்தியான முறையிலும் மனித நேயத்திற்கு மதிப்பளிக்கும் வகையிலும் ஏற்பாடு செய்திருந்தது!

கடந்த 20-12-2025 அன்று சனிக்கிழமை மாலை ஸ்காபுறோவில் அமைந்துள்ள மெற்றொபொலிட்டன் விழா மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி விழாவை SV MEDIA, VANAKKAM TV ஆகிய சகோதர இலத்திரனியல் ஊடகங்கள் இணைந்து நடத்தின.

தமிழ்வண் அதிபர் ஸ்ரீ அவர்களின் தலைமையில் அர்ப்பணிப்புடன் இயங்கிவரும் இந்த ஊடகத்தின் தற்போது இரண்டு தூண்களாக விளங்கும் பிரசாந்த் மற்றும் தனராஜ் ஆகியோர் தாயகத்திலும் ஊடக நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவத்துடன் கனடாவில் கால் பதித்த நாட்தொடக்கம் தொடர்ச்சியாக தமிழ் வண் தொலைகாட்சியுடன் தங்களை இணைத்துக் கொண்டார்கள். அவர் இருவரும் பிரதான தொகுப்பாளர்களாக விழா மேடையில் தோன்றினார்கள்.




அவர்களில் பலர் தங்களை வெளிக்காட்டிக் கொள்ளாமல் தாயகத்தில் வறுமைக்கோட்டுக்கு கீழ் உள்ள மாணவர்களின் கல்விக்கான செலவுகளை அனுப்பி அவர்கள் தங்கள் கல்வியில் உயரும் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுப்பவர்களாக விளங்குகின்றார்கள்.





மேலும் அற்புதமான கலைப் படைப்புக்கள் அங்கு மேடையேறி சபையோரை மகிழ்வித்தும் உற்சாகப் படுத்தியும் பாராட்டுக்களைப் பெற்றன. மனித நேயப் பணிகளை ஆற்றும் அன்பர்களையும் அவர்களது நிறுவனங்களையும் நாம் அனைவரும் வணங்கவேண்டும் என்று உதயன் பிரதம ஆசிரியர் தனது சிறப்புரையில் குறிப்பிட்டிருந்தது கனவிக்கத்தக்கது.

மேலும், ஸ்காபுறோவில் அமையவுள்ள "தமிழர் சமூக மையம்" நிறுவப்பெறுவதற்கான நிதி அன்பளிப்பாக சுமார் 40 ஆயிரம் டாலர்களை சில தனி நபர்களும் வர்த்தக நிறுவனங்களும் வழங்கியுள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.






நிறைவாக, மேற்படி கனடிய தமிழ்த் தொலைக்காட்சி நிறுவனமான "தமிழ்வண்" தனது 20வது ஆண்டு நிறைவு விழாவை கொண்டாடும் இந்த காலப்பகுதியில் அவர்களது ஊடக நிறுவனம் எவ்வித தொய்வும் இன்றி சிறப்பாக இயங்க தங்கள் ஆதரவை எமது தமிழ்ச் சமூகம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையும் பல அன்பர்களால் விடுக்கப்பெற்றது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அழைக்கப்பெற்ற அரசியல் பிரமுகர்களாக மார்க்கம் தோர்ண்ஹில் தொகுதியின் மாகாண அரசின் உறுப்பினராக உள்ள லோகன் கணபதி அவர்களும் பிக்கரிங் தொகுதியின் கனடிய பாராளுமன்ற உறுப்பினராக உள்ள யுனிற்றா நாதன் அவர்களும் கலந்து கொண்டு ர்ப்பணிப்புள்ள ஒரு ஊடகமாகவும் விளங்கும் "தமிழ்வண்" தனது 20வது ஆண்டு நிறைவு விழாவிற்கு தங்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள். அத்துடன் மிகவும் நீண்ட நேரம் விழா மண்டபத்தில் அமர்ந்திருந்து அனைவரோடு உரையாடியாடி மேடையில் கௌரவிக்கப்பெற்ற கொடையாளர்களையும் கௌரவித்தார்கள்.

நூற்றுக்கணக்கான வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் ஊடக நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் அங்கு கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தார்கள். தமிழ் வண் தொலைக்காட்சியின் ஆலோசகர் சாமி அப்பாத்துரை அவர்களும் உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லோகேந்திரலிங்கம் அவர்களும் கனடிய தமிழர் வர்த்தக சம்மேளனத்தின் தலைவர் அரிகரன் அவர்களும் சிறப்புரையாற்றினார்கள்.

அன்றைய மேடையில் பல கொடையாளர்கள் மற்றும் மனித நேயப் பணிகளில் ஈடுபாடு கொண்டவர்கள் என பலர் அடையாளப்படுத்தப்பெற்றனர்.

- SATHIYAN

# ஒன்ராறியோவில் 17 வயதான தமிழ் இளைஞன் ருகேஷ் வாகீசனுக்கு கனடாவின் உயரிய 'Howard Bar' தலைமைத்துவ விருது!






கனடாவில் மிக உயரிய 'Howard Bar' விருது 17 வயதான ருகேஷ் வாகீசனுக்கு வழங்கப் பட்டுள்ளது. ஒன்றாரியோவில் 500 இராணுவ Cadets-களில் இருந்து 13 பேர் மட்டுமே இந்த உயரிய விருதிற்கு தெரிவுசெய்யப் பட்டுள்ளனர். இதில் சுரபாநளா மட்டுமே தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பது பெருமைக்குரிய விடயமாகும்.

கனடாவின் Army Cadet Program உருவாக்கத்தில் முக்கிய பங்காற்றிய மேஜர் ஜெனரல் வில்லியம் ஹோவர்டின் (Major-General William Howard) நினைவாக Army Cadet League of Canada அமைப்பினால் இந்த விருது வழங்கப்படுகிறது.

இந்த விருது, சேவை மனப்பான்மை, தலைமைத்துவ திறன், சமூக சேவை, ஒழுக்கம், ஆரோக்கியமான வாழ்க்கை முறையை வெளிப்படுத்தும் Cadets-களுக்கே வழங்கப்படுகிறது.

இந்த விருதைப் பெறுவது, Gold Star Army Cadet ஆக சிறப்பான சாதனையைப் பெற்றதற்கான மிக உயரிய அங்கீகாரம் என்று Army Cadet League தெரிவித்துள்ளது.

இந்த விருதினைப்பெற்ற ருகேஷ் வாகீசன் கனடிய பரத நாட்டிய ஆசிரியை, திருமதி. கலைமதி வாகீசனின் இளைய புதல்வர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


**Tamilthakaval.org**

**ஒரு இலவச சேவை -- A Free Service**



**இணையத்தளம்: www.tamilthakaval.org**

இவ் இணையத்தளம் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடைய உற்றார், உறவினர்களின் பிரிவுத் துயரச்செய்திகள், நினைவஞ்சலிகள் முதலியவற்றை எப்பொழுதும் ஏவ்வித சந்தாவுமின்றி இலவசமாகப் பிரசுரித்து அறிவித்தல் தரும் நோக்கத்தில் தாபிக்கப்பட்ட தொன்றாகும்.

மேலும் பல்வேறு முக்கிய செய்திகளைக்கூட பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் இதில் தரப்பட்டுள்ளன.

செய்திகளைப் பிரசுரிப்பதற்கான விண்ணப்ப படிவமும், நிரப்புவதற்கான விதிமுறைகளும் விவரமாக இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.

உங்கள் வசதிக்கமைய செய்திகளை "info@tamilthakaval.org" என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.

மேலதிக தகவல்களுக்கு 1-866-300-1765 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

மேலும் விவரங்களுக்கு இணையத்தளம் tamilthakaval.org பார்வையிடவும்.

இந்த இணையத்தளத்தை சில தொண்டர்கள் ஒரு சமூக சேவையாக கருதி பொறுப்புடன் நன்கு நடாத்தி வருகின்றார்கள்.

இவர்கள் இப்பணியை வெற்றிகரமாக தொடருவதற்கு ஈழத்தமிழர்களாகிய உங்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது.

உங்களால் இயன்றவரை செய்திகளை உடனுக்குடன் தெரிவித்து இந்த இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உதவி செய்து இச்சமூக சேவையை மேன்மேலும் மேன்மைபடுத்த உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

# மக்கள் உயிருக்குப் போராடும் போது எரிபொருள் மற்றும் நிதியைக் காரணம் காட்டி பணிகளைத் தாமதப்படுத்துவதை ஏற்க முடியாது என வடக்கு ஆளுநர் சீற்றம்!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்



மக்கள் உயிருக்குப் போராடும் இடர் வேளையில் எரிபொருள் மற்றும் நிதியைக் காரணம் காட்டி பணிகளைத் தாமதப்படுத்துவது எவ்வகையிலும் ஏற்புடையதல்ல என்றும், சபையில் தீர்மானங்களை நிறைவேற்றுவதன் ஊடாக சட்டத்துக்கு முரணான செயற்பாடுகளை ஒருபோதும் சட்டபூர்வமாக்கிவிட முடியாது என்றும் வட மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாணத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின் மேயர்கள் மற்றும் தவிசாளர்களுக்கான விசேட செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமை (19.12.2025) கைதடியிலுள்ள உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்தில் நடைபெற்றபோதே, முதன்மை அதிதியாகக் கலந்துகொண்ட ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், பேரிடர் காலங்களில் மக்களின் துயர்துடைக்க இரவு பகலாக உழைத்த பல தவிசாளர்களை நான் பாராட்டுகின்ற அதேவேளை, சில கசப்பான உண்மைகளையும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. பேரிடர் வேளையில் சில சபைகளின் செயற்பாடுகள் தொடர்பில் மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள் என்னிடம் கவலையோடு முறையிட்டனர்.

மக்கள் உயிருக்குப் போராடும்போது, "எரிபொருள் தந்தால்தான் இயந்திரங்களை இயக்குவோம்", "பணம் ஒதுக்கினால்தான் வேலை செய்வோம்" என நிபந்தனை விதித்துக்கொண்டு நிர்வாகச் சிக்கல்களைக் காரணம் காட்டியதை மன்னிக்க முடியாது. மாகாண நிர்வாகம் நிதியை வழங்கத் தயாராக இருக்கும்போதும், பிரதேச செயலகங்களில் நிதியைக் கோரி காலத்தை வீணடித்தமை தவறான முன்னுதாரணமாகும்.

இன்றைய ஊடகங்களில் வெளியான செய்தி வேதனையளிக் கிறது. யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதியில் வீடொன்றின் மீது மரம் வீழ்ந்த நிலையில், அதனை அகற்ற ஆளணி இல்லை என கைவிரித்ததாகவும், இறுதியில் சபை உறுப்பினர்களே அதனை அகற்றியதாகவும் அறியமுடிகிறது. இது மிகவும் வெட்கக்கேடான விடயமாகும். ஆபத்து வேளையில் இவ்வாறு பொறுப்பற்ற ரீதியில் அதிகாரிகள் நடந்துகொள்வதை ஏற்க முடியாது.

சட்ட ஏற்பாடுகளுக்கு முரணாகச் செயற்படுமாறு அதிகாரிகளை வற்புறுத்துவதும், அவர்கள் மறுக்கும் பட்சத்தில் சபையில் தீர்மானம் நிறைவேற்றி அதனைச் செய்ய முற்படுவதும் தவறான நடைமுறையாகும். சட்டத்துக்கு முரணான ஒரு விடயத்தை, சபையில் தீர்மானம் நிறைவேற்றுவதன் மூலம் சட்டபூர்வமாக்கிவிட முடியாது என்பதைத் தலைவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். அதிகாரிகள் சட்டத்தை சுட்டிக்காட்டுவது உங்களைக் கட்டுப்படுத்த அல்ல, மாறாக உங்களைச் சரியான பாதையில் வழிப்படுத்தவே என்பதை உணர வேண்டும்.

சில சபைகளில், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் தகவல்கள் தவிசாளரின் அனுமதியுடனேயே வழங்கப்பட வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது. இது அச்சட்டத்தின் அடிப்படை நோக்கத்தையே சிதைப்பதாகும். நாம் நேர்மையாகவும் வெளிப்படைத்தன்மையுடனும் இருக்கும் பட்சத்தில் தகவல்களை வழங்கப் பயப்படத் தேவையில்லை. இவ்வாறான சட்ட முரணான தீர்மானங்களை அனுமதிக்க முடியாது எனவும் ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சாம்பசிவம் சுதர்சன் குறிப்பிடுகையில், சட்டவிரோத கட்டடங்களை இடிக்கும் அதிகாரம் ஆளுநருக்கோ ஆணையாளருக்கோ இல்லை. கட்டட அனுமதியை வழங்கும் உள்ளூராட்சி மன்றங்களுக்கே அதனை அகற்றும் அதிகாரமும் உள்ளது. நாங்கள் சட்ட ஆலோசனை மட்டுமே வழங்க முடியும். அதேபோல, அதிகாரிகளுடன் முரண்பட்டுக்கொண்டு அவர்களை இடமாற்றம் செய்யக் கோருவது "சங்கீதக் கதிரை" விளையாட்டைப் போன்றது. இருக்கும் ஆளணியைக் கொண்டு, அனுசரித்து வேலை வாங்கும் ஆளுமை தவிசாளர்களுக்கு இருக்க வேண்டும், என்றார்.

தேசிய கணக்காய்வு நடைமுறைகள், பெறுகை நடைமுறைகள் மற்றும் தகவல் அறியும் உரிமைச்சட்டம் ஆகிய தலைப்புகளில் விரிவான அமர்வுகளாக நடைபெற்ற இச்செயலமர்வில் வடக்கு மாகாண உள்ளூராட்சி மன்றங்களின் மேயர்கள், தவிசாளர்கள் மற்றும் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.





இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாணத்தில் வாகன விபத்துக்களால் தொடர்ச்சியாக அநியாயமாகக் கொல்லப்படும் அப்பாவி மக்கள்!



கடந்த 20ம் திகதி சனிக்கிழமை அன்றையதினம் யாழ்ப்பாணம் - பொம்மைவெளி பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் குடும்பப் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், மூளாய் பகுதியைச் சேர்ந்த தாயும் மகளும் மோட்டார் சைக்கிளில் யாழ்ப்பாணம் நோக்கி சென்றுகொண்டிருந்தனர். இதன்போது எதிர் திசையில் இருந்து வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று முந்தி செல்ல முற்பட்டவேளை நிலைகுலைந்த தாயும் மகளும் மோட்டார் சைக்கிளுடன் நடு வீதியில் விழுந்தனர்.

இதன்போது எதிர் திசையில் வந்த கலி பவுசர் அந்த தாயின் தலையின்மீது ஏறி விபத்து சம்பவித்துள்ளது. இதன்போது சம்பவ இடத்திலேயே குறித்த பெண் உயிரிழந்துள்ளார். உயிரிழந்தவரின் சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# 2010இற்குப் பிறகு யாழ்ப்பாணம் வைத்தியசாலையில் அடையாளம் காணாத 62 உடல்கள் தகனம்

- ந.லோகதயாளன்

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2010 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டு வரையில. அடையாளம் காணப்படாத 62 உடல்கள் தகனம செய்யப்பட்டுள்ளமை தகவல் அறியும் சட்டத்தின் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் இருந்து உறவுகள் மற்றும் ஏனையோரால் அடையாளம் காணப்படாது வைத்தியசாலை நிர்வாகத்தினாலேயே தகனம. செய்யப்பட்ட உடல்களின் எண்ணிக்கை தொடர்பில் ஆண்டு ரீதியாக தகவல் அறியும் சட்டத்தின் கீழ் விண்ணப்பிக்கப்பட்டது. இதற்கு பதிலளிக்கும்போதே வைத்தியசாலை நிர்வாகத்தினால் மேற்படி எண்ணிக்கை வழங கப்பட்டுள்ளது.

இதற்கமைய 24 உடல்கள் பண்ணை பொது மயானத்திலும் எஞ்சிய 38 உடல்களும் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டுள்ளன.

இதேநேரம் இந்த 62 உடல்களில் 2010ஆம. ஆண்டு 13 உடல்களும், 2011 ஆம் ஆண்டு 07 உடல்களும், 2012 ஆம் ஆண்டு 02 உடல்களும், 2014 ஆம் ஆண்டு 10 உடல்களும், 2016ஆம் ஆண்டு ஓர் உடலும், 2017 ஆம் ஆண்டு 03 உடல்களும் அடக்கம் செய்யப்பட்டுள்ளதோடு 2018 ஆம் ஆண்டு இரு உடல்கள் தகனம் செய்யப்பட்டுள்ளன.

2019இல் 04 உடல்களும், 2020 இல் 04 உடல்களும், 2021 இல் 3, 2022இல் இரண்டு, 2023இல் 04 உடல்களும், 2025 இல் 04 உடல்களுமாகவே 62 உடல்கள் அடையாளம் கண்டு உரிமை கோரப்படாது நீதிமன்ற அனுமதி பெறப்பட்டு வைத்தியசாலையால் தகனம் செய்யப்பட்டுள்ளன.

# மண்டைதீவு சர்வதேச கிரிக்கெட் மைதான திட்டம் சட்டவிரோதமானது என ஜனாதிபதியிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

- ந.லோகதயாளன்

யாழ்ப்பாணம் மண்டைதீவில் முன்மொழியப்பட்டுள்ள சர்வதேச துடுப்பாட்ட மைதானம் மற்றும் விளையாட்டு வளாகத்திட்டம் சட்டவிரோதமானது எனவும், இது அத்தீவின் சூழலியல் மற்றும் உள்ளூர் சமூகங்களுக்குப் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் எனவும் இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்பு சங்கம் எச்சரித்துள்ளது.இத்திட்டம் அமையவுள்ள பகுதியில் கண்டல் தாவரங்கள், கடல் புற்கள், உப்பளங்கள் மற்றும் மண்டைதீவு வனச்சரகம் போன்ற முக்கியமான சூழலியல் மண்டலங்கள் இருப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்புச் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

கடலோரப் பாதுகாப்பு மற்றும் கடலோர வள முகாமைத்துவ சட்டத்தின் கீழ் தேவையான எவ்வித சட்டபூர்வ அனுமதிகளையும் சிறிலங்கா கிரிக்கெட் நி-றுவனம் பெறவில்லை என அந்தச் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

மண்டைதீவு ஒரு இயற்கை வெள்ளத் தடுப்பு வலயமாகும். மழைக்காலங்களில் இப்பகுதி நீரில் மூழ்கும் வாய்ப்புள்ளதால், இங்கு பார-ிய கட்டுமானங்களை மேற்கொள்வது நிதி விரயத்துக்கும் தொடர்ச்சியான பராமரிப்பு செலவுகளுக்கும் வழிவகுக்கும். அதிகாரிகளுக்கு தவறான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக கவலை தெரிவித்துள்ள குறித்த சங்கம், இது இலங்கை யின் நிலையான அபிவிருத்திக் கொள்கைக்கு எதிரானது என்றும் கூறியுள்ளது.

“எங்கள் எதிர்ப்பு யாழ்ப்பாணத்தில் விளையாட்டு வசதிகளை மேம்படுத்துவதற்கு எதிரானது அல்ல. மாறாக, சூழலியல் முக்கியத்துவம் வாய்ந்த மண்டை
தீவில் இத்திட்டத்தை முன்னெடுப்பதற்கும், சுற்றுச் சூழல் சட்டங்கள் மீறப்படுவதற்கும் மட்டுமே“ என இலங்கை வனவிலங்கு மற்றும் இயற்கை பாதுகாப்புச் சங்கம் தெளிவுபடுத்தியுள்ளது. இத்திட்டத்தை உடன டியாக நிறுத்தி இது குறித்து விசாரணை நடத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு மாவட்டத்தின் 39 வீத நிலம் வன வளத் திணைக்களத்தின் நிர்வாகத்தின் கீழ் உள்ளதாக வெளியாகியுள்ள தகவல்!

- ந.லோகதயாளன்



மட்டக்களப்பு மாவட்டத்தில் வன வளத் திணைக்களத்தின் ஆளுகையில் மட்டும் 1,13,016 கெக்டேயர் நிலம் உள்ளமை தகவல் அறியும் சட்டத்தின் கீழ் உறுதி செய்யப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் திணைக்களங்கள் வசம் உள்ள நிலங்களின் அளவு தொடர்பில் செய்யப்பட்ட விண்ணப்பத்திற்கு வழங்கிய பதிலிலேயே இந்த தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வழங்கிய பதிலில் இரண்டு லட்சத்து 85 ஆயிரத்து 400 கெக்டேயர் நிலப்பரப்பு கொண்ட மட்டக்களப்பு மாவட்டத்தில் ஒரு லட்சத்து 13 ஆயிரத்து 16 கெக்டேயர் நிலம் வன வளத் திணைக்களத்திடம் உள்ளதாக அந்த திணைக்களம் எழுத்தில் பதிலளித்துள்ளது.



இந்த அளவானது மாவட்ட மொத்த நிலப்பரப்பின் 39 வீதம் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# கிளிநொச்சியில் பல மக்கள் நலன்கள் தொடர்பான நிகழ்ச்சிகளில் கலந்து சிறப்பித்த இலங்கைப் பிரதமர் ஹரிணி!

இலங்கை செய்திகள் Sri Lanka News

பு. கஜிந்தன்



கிளிநொச்சியில் பல மாவட்டத்துக்கு உத்தியோகபூர்வ பயணம் மேற்கொண்ட பிரதமர் கலாநிதி ஹரினி அமரசூரிய, மாவட்டத்தின் வரலாற்றுப் புகழ்பெற்ற புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்துக்கு 21ம் திகதி ஞாயிற்றுக்கிழமையன்று (21.12.2025) சென்று விசேட வழிபாடுகளில் ஈடுபட்டார்.

அன்று காலை முதல் கிளிநொச்சியில் நடைபெற்ற பல்வேறு அபிவிருத்தி மற்றும் மக்கள் நலன் சார்ந்த நிகழ்வுகளில் கலந்துகொண்ட பிரதமர், அதன் ஒரு பகுதியாக வரலாற்றுச் சிறப்புமிக்க இவ்வாலயத்துக்கும் வருகை தந்தார்.



ஆலயத்துக்கு வருகை தந்த பிரதமரை ஆலய நிர்வாகத்தினரும் பொதுமக்களும் வரவேற்றனர். அதனைத் தொடர்ந்து ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூசை வழிபாடுகளில் பிரதமர் பக்திபூர்வமாகப் பங்கேற்றார். வழிபாடுகளைத் தொடர்ந்து, மிகவும் பழமை வாய்ந்த இவ்வாலயத்தின் வரலாற்றுப் பின்னணி, ஐதீகங்கள் மற்றும் ஆலயத்தின் சிறப்புக்கள் குறித்து பிரதமர் மிகவும் ஆர்வத்துடன் கேட்டறிந்து கொண்டார்.

இந்நிகழ்வில் பிரதமருடன் இணைந்து, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சர் கௌரவ உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ க.இளங்குமரன் மற்றும் கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.முரளிதரன் ஆகியோரும் வழிபாடுகளில் கலந்துகொண்டனர்.



# யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் வன்முறைக் கும்பல்கள் அட்டகாசம் – பல உடைமைகள் சேதம்!

யாழ்ப்பாணம் வடமராட்சிப் பகுதியில் வன்முறைக் கும்பல்கள் அட்டகாசம் செய்து வீட்டின் மீதும் வாகனங்கள் மீதும் தாக்குதல்கள் நடத்தியதால் பல உடைமைகள் சேதமாக்கப்பட்டுள்ளன. மேற்படி சம்பவம் 21ம் திகதிஞாயிற்றுக்கிழமை இரவு நடந்துள்ளது.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது, கைக் குழந்தைகளுடன் வீட்டில் இருந்த குடும்பத்தினர் மீது தாக்குதல் மேற்கொள்ளும் முயற்சியில் இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது.

வாள்கள், கத்தி, கற்களுடன் வருகை தந்த ஒரு குழுவினால் கட்டைக்காடு கிழக்கு பகுதியில் இந்த தாக்குதல் சம்பவம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. உழவு இயந்திரம், மற்றுசொகுசு வாகனம் வீட்டின் பொருட்கள் கதவுகள் சேதமாக்கப்பட்டுள்ளன.

இந்த வன்முறைக் குழுவினர் கட்டைக்காடு கிழக்கு பகுதியில் மதுபோதையில் நீண்ட நாட்களாக குடும்பங்களை அச்சுறுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது. பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிசார் ஆரம்பித்துள்ளதுடன் இந்த சம்பவத்துடன் தொடர்புடைய பலருக்கு எதிராக மருதங்கேணி பொலிஸ் நிலையத்தில் அதிகளவான முறைப்பாடுகள் காணப்படுகின்ற நிலையில் பொலிசார் இவர்களை கைது செய்ய தயங்குவதாக பாதிக்கப்பட்ட குடும்பஸ்தர் தெரிவித்துள்ளார்.




# Thana Insurance Inc

## T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

## PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

## NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar

Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca

E-mail : thana7@gmail.com


Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772

Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."

# புயலுக்குப் பின்னரான ஒரு போராட்டம்?



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

**தை**யிட்டி விகாரை சட்டவிரோதமானது என்று ஒரு தீர்மானத்தை வலிகாமம் வடக்கு பிரதேச சபை அண்மையில் எடுத்திருந்தது. அது சட்டவிரோதமான ஒரு விகாரை என்பதனை மூன்று மொழிகளிலும் எழுதி அங்கே காட்சிப்படுத்த வேண்டும் என்றும் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. மேலும் அந்த விகாரையின் அதிபதிக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் பதவி உயர்வு ஒன்று வழங்கப்பட இருப்பதாக வந்த செய்திகளின் அடிப்படையில் அந்த நாளில் அந்த விகாரைக்கு எதிராக ஒரு போராட்டத்தில் நடாத்துவதற்கு வலி வடக்கு பிரதேச சபை முடிவெடுத்தது. அந்த அடிப்படையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை அங்கே ஒரு போராட்டம் பெரும்பாலான எல்லா தமிழ்த் தேசியக் கட்சிகளாலும் முன்னெடுக்கப்பட்டது.

வழமையாக ஒவ்வொரு பௌர்ணமி நாளும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர்தான் தையிட்டி விகாரை அகற்றப்பட வேண்டும் என்று கேட்டு போராடி வந்திருக்கிறார்கள். அந்தப் போராட்டம் பெரும்பாலும் சிறிய கவன ஈர்ப்புப் போராட்டமாகத்தான் இருந்திருக்கிறது. எனினும் அது ஒரு தொடர்ச்சியான போராட்டம். ஒவ்வொரு பௌர்ணமி நாளும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர்களும் தொண்டர்களும் தையிட்டி விகாரைக்குப் போகும் வழியில் நின்று போராடுவார்கள்.

இம்முறை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மூத்த தலைவர்கள் தமிழகத்திற்கு விஜயம் மேற்கொண்டிருக்கும் ஒரு பின்னணியில், தமிழரசுக் கட்சியும் ஏனைய கட்சிகளும் இணைந்து ஒரு போராட்டத்தை முன்னெடுத்திருக்கின்றன. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களும் அங்கேகாணப்பட்டார்கள். குறிப்பாக சஜித் பிரேமதாசாவின் கட்சியைச் சேர்ந்த தமிழ் உள்ளூராட்சி சபை உறுப்பினர் ஒருவரும் அங்கே காணப்பட்டார். ஆளும் தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்களைத்தவிர, ஏனைய தமிழ் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் அந்தப் போராட்டத்தில் காணப்பட்டார்கள்.

அந்தப் போராட்டம் சட்டவிரோதமானது என்று கூறி போலீசார் அதனை அடக்க முற்பட்டார்கள். அதன் விளைவாக நல்லூர் சிவகுரு ஆதினத்தின் முதல்வராகிய சாமியாரும் உட்பட ஐவர் கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கிறார்கள்.

இப்போராட்டத்தை முன்னெடுத்தது தையிட்டி விகாரை அமைந்திருக்கும் பகுதிக்குரிய பிரதேச சபைதான். எனவே இது மக்கள் ஆணையைப் பெற்ற உள்ளூர் ஆட்சி சபையால் முன்னெடுக்கப்பட்ட ஒரு போராட்டம். போராட்டத்தில் கைது செய்யப்பட்டவர்கள் மத்தியில் குறிப்பிட்ட பிரதேச சபையின் தவிசாளர் இருக்கவில்லை. போலீசார் பலத்தைப் பிரயோகிக்க முற்பட்ட வேளை சில தவிசாளர்கள் அந்த பகுதியிலிருந்து நழுவி விட்டதாகத் தெரிகிறது. அதே சமயம் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீரீதரன் அங்கே காணப்பட்டார்.கைது நடவடிக்கைகளின் போது அவரும் போலீசாரால் அவமதிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

போராட்டம் நடந்த அன்று சிறீதரன் தையிட்டியில் நின்றார். அதே நாள் பிற்பகல், அவருடைய கட்சியின் பதில் தலைவராகிய சிவஞா-னம் கைநொச்சியில் நின்றார். கிளிநொச்சியில் அவர் சந்திரகுமாரை சந்தித்து உரையாடியதாக படங்கள் வெளி வந்தன. சந்திரகுமாரை சிறீதரன் தனது உள்ளூர் எதிரியாகக் கருதுகிறார். ஆனால் சந்திரகுமாரை அவருடைய கட்சியின் பதில் தலைவர் அவருடைய அலுவலகத்திற்குத் தேடிச்சென்று சந்தித்திருக்கிறார். அதுவும்




எப்பொழுது என்று பார்த்தால் அவருடைய கட்சியை சேர்ந்தவர்களால் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்திற்கு அமைய, தையிட்டியில் ஒரு போராட்டம் நடந்த அன்று.அந்தப் போராட்டத்தில், நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் கலந்து கொண்டு போலீசாரின் பலப் பிரயோகத்துக்கு உள்ளாகியிருந்த ஒரு நாளில் அந்தச் சந்திப்பு நடந்திருக்கிறது.

கிளிநொச்சியில் சிறீதரனுக்கும் சந்திரகுமாருக்கும் இடையிலான முரண்பாட்டை சுமந்திரன் ஏற்கனவே கையாண்டு வருகிறார். சந்திரகுமாரின் சமத்துவக் கட்சியானது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் இப்பொழுது அங்கம் வகிக்கின்றது. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது அண்மையில் தமிழரசுக் கட்சியை சந்தித்திருந்தது. இந்த இரண்டு கட்சிகளும் இணைந்து கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவரை சந்திக்க நேரம் கேட்டன.ஒருபுறம் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குள் சந்திரகுமார் காணப்படுகிறார். அதேசமயம் உள்ளூரில் அவர் சிறீதரனுக்கு எதிராகவும் காணப்படுகிறார்.

தையிட்டி போராட்டம் நடந்த அதே காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் "காலைக் கதிர்" பத்திரிகையிலும் கொழும்பிலிருந்து வெளிவரும் "வீரகேசரி" மற்றும் "சண்டே டைம்ஸ்" ஆகிய பத்திரிகைகளிலும் சிறீதரனைக் குற்றஞ்சாட்டும் ஒரு செய்தி வெளியாகியிருந்தது.

கணக்காய்வாளர் நாயகம் பதவிக்கு முன்மொழியப்பட்ட இராணுவ அதிகாரிக்கு அரசியலமைப்பு பேரவையில் அங்கம் வகிக்கின்ற சிறீதரன் வாக்களித்துள்ளதாக அச்செய்திகள் கூறுகின்றன.அது உண்மையான தகவல் அல்லவென்றும், அரசியலமைப்பு பேரவை கூடியபோது அதில் தான் நேரடியாக கலந்துகொள்ளவில்லை என்றும், சூம் செயலி மூலமே அதில் பங்குபற்றிதாகவும், அந்த ராணுவ அதிகாரியின் நியமனத்துக்கு எதிராகவே தான் வாக்களித்ததாகவும் சிறீதரன் கொழும்பை மையமாகக் கொண்டு இயங்கும் ஒரு யூடியூப்பருக்குக் கூறியிருக்கிறார்.

ஆனால் கட்சிக்குள் அவருக்கு எதிராக காணப்படும் சுமந்திரன் அணி இந்த விடயத்தை பெரிதாக்கி சமூகவலைத் தளங்களில் பரப்பி வருகிறது. அந்த ராணுவ அதிகாரியை நியமிக்கும் விடயத்தில் சிறீதரன் ஆதரவாக வாக்களித்ததாக அவர்கள் குற்றம் சாட்டுகிறார்கள்.சிறீதரன் அவ்வாறு வாக்களிக்கவில்லை என்றால் தனக்கு எதிராக எழுதியிருக்கும் மேற்படி பத்திரிகைகளுக்கு எதிராக வழக்குத் தொடுக்கலாம். அவர் அதைச் செய்து தன்னுடைய நேர்மையை நிலைநாட்ட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அரசியல் வட்டாரங்களில் உண்டு. இப்படிப்பட்டதோர் பின்னணியில்தான் சிறீதரன் தையிட்டியில் காணப்பட்டார். அவரையும் போலீசார் மரியாதையாக நடத்தவில்லை.

அந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட நல்லூர் சிவகுரு ஆதீனத்தின் சாமியாரை போலீசார் கையாண்ட விதம் சமூக வலைத்தளங்களில் பரவலாக விமர்சிக்கப்படுகிறது. இதே இடத்தில் ஒரு பௌத்த மதகுரு இருந்திருந்தால் போலீசார் அவ்வாறு நடந்திருக்க மாட்டார்கள் என்பதும் சுட்டிக்காட்டப்படுகிறது. காவி உடை அணிந்த ஒரு பௌத்த மத குருவுக்கு கொடுக்கப்படும் மரியாதைக்கும் காவி உடை அணிந்த இந்து ஆதீன முதல்வருக்குக் கொடுக்கப்படும் மரியாதைக்கும் இடையில் உள்ள வேறுபாட்டை அது காட்டுவதாக தமிழ் சமூகவலைத்தளங்களில் சுட்டிக்காட்டப்படுகிறது. நாட்டில் இரண்டு சட்டங்கள் உள்ளன என்பதனை இது மீண்டும் நிரூபித்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப்படுகிறது.

ஒரு புயல் தாக்கிய பின்னரான அரசியல் சூழலில் நிகழ்ந்த முதலாவது போராட்டம் இதுவாகும். நாடு இப்பொழுதும் புயலின் அழிவுகளில் இருந்து முழுவதுமாக விடுபட்டிருக்கவில்லை. மலையகத்தில் இப்பொழுதும் பாதைகள் முழுமையாகச் செப்பனிடப்படவில்லை. இடம்பெயர்ந்த எல்லாருமே முழுமையாக தங்கள் இடங்களில் மீளக் குடிமரவில்லை. அரசாங்கம் அறிவித்த இழப்பீடுகள் முழுமையாக மக்களுக்கு வழங்கப்பட்டிருக்கவில்லை. இப்படிப்பட்டதோர் பின்னணியில்தான் மேற்படி போராட்டம் தையிட்டியில் வெடித்திருக்கிறது.

புயலுக்குப் பின்னரான அரசியல் சூழலிலும்கூட அரசாங்கம் தையிட்டி விவகாரத்தில் விட்டுக்கொடுப்போடு நடந்து கொள்ளவில்லை என்பதை நிரூபிக்கும் விதத்தில் அந்த விகாரைக்கு பொறுப்பாக இருக்கும் விகராதிபதிக்கு அண்மையில் ஒரு பதவி உயர்வு வழங்கப்பட்டிருந்தது. இந்தப் பதவி உயர்வும் மேற்படி போராட்டத்திற்கு ஒரு காரணம். சட்டவிரோதமாக நிறுவப்பட்டிருக்கும் ஒரு விகாரையின் அதிபதிக்கு பதவி உயர்வு வழங்கியதன் மூலம் அரசாங்கம் அவருக்கு அங்கீகாரத்தை வழங்கியிருப்பதாக வலி கிழக்கு பிரதேச சபை குற்றம் சாட்டுகிறது.

தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறவர்களுக்கு பதவி உயர்வு வழங்குவது என்பது இலங்கையில் புதியது அல்ல. ஆயுதப் போராட்டத்திற்கான உணர்ச்சிகரமான சூழலை உற்பத்தி செய்த சம்பவங்களில் ஒன்றாகிய தமிழராட்சி மாநாட்டுப் படுகொலைகளுக்கு பொறுப்பாக இருந்த போலீஸ் அதிகாரிக்கும் பின்னர் ஏ.எஸ்.பி பதவி உயர்வு வழங்கப்பட்டதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். அப்படித்தான் இப்பொழுது தையிட்டி விகாரதிபதிக்கும்.


கடந்த பல மாதங்களாக தையிட்டிட்டியில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தான் ஒவ்வொரு பௌர்ணமி நாளன்றும் போராடி வந்திருக்கிறது அப்போராட்டங்களில் சிலசமயம் போலீசார்ரோடு முரண்பாடுகள், தள்ளுமுள்ளுகள் ஏற்பட்டிருக்கின்றன. இம்முறை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்கள் தமிழகத்தில் ஒரு சுற்றுப்பயணத்தை மேற்கொண்டிருக்கும் காலகட்டத்தில், தமிழரசு கட்சியின் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள் இந்தப் போராட்டத்தில் முன்னணியில் காணப்பட்டார்கள்.

போலீசார் ஏற்கனவே அந்தப் போராட்டத்தில் ஈடுபடக் கூடியவர்கள் என்று சந்தேகிக்கப்பட்டவர்களுக்கு எதிராக தடை உத்தரவுகளை பெற்றிருக்கிறார்கள். அந்த தடை உத்தரவின் அடிப்படையில்தான் அவர்கள் போராட்டத்தை முன்னின்று நடத்தியவர்கள் மீது பலப் பிரயோகத்தை மேற்கொண்டிருக்கிறார்கள்.

ஒரு பேரிடருக்கு பின்னரான அரசியல் சூழலில், போலீசார் இவ்வாறு தமிழ் அரசியல் செயற்பாட்டாளர்களையும் அரசியல்வாதிகளையும் சாமியார்களையும் கையாண்ட விதம் ஓர் அடிப்படை உண்மையை தமிழ் மக்களுக்கும் உலகத்துக்கும் உணர்த்துகிறது. போராடவில்லை என்றால் சிங்கள பௌத்த அரசு கட்டமைப்பின் உண்மையான முகம் வெளியில் தெரியவராது என்பதுதான் அது.

இப்போதுள்ள தேசிய மக்கள் சக்தி அரசாங்கமானது, நாட்டில் இனவாதம் இல்லை என்றும், தான் இனவாதத்துக்குத் தலைமை தாங்கவில்லை என்றும் கூறிக்கொள்கிறது. தனக்கு முன்பு ஆட்சி செய்த மேட்டுக்குடி அரசியல்வாதிகள்தான் இனவாதத்தை ஓர் அரசியல் முதலீடாகப் பயன்படுத்தினார்கள் என்றும் அரசாங்கம் கூறிவருகிறது. அரசாங்கம் இவ்வாறு கூறுவதை ஒரு பகுதி தமிழ் மக்களும் நம்புவதாகத் தெரிகிறது. அப்படி ஒரு சிறு பகுதி நம்புகிறதோ இல்லையோ தமிழ் மக்கள் அவ்வாறு நம்புகிறார்கள் என்று நம்பத்தக்க விதத்தில் அரசாங்கத்தின் சமூக வலைத்தள பிரச்சாரங்கள் காணப்படுகின்றன.

இப்படிப்பட்டதொரு பின்னணியில், தையிட்டி போராட்டமானது போலீசாரின் மெய்யான முகத்தை வெளியே கொண்டு வந்திருக்கிறது. ஒரு புயலுக்குப் பின்னரும் சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்பின் செயல்பாடுகளில் மாற்றம் இல்லை என்பதனை அது நிரூபித்திருக்கிறது. இதன் ஊடாக தமிழ் மக்கள் ஓர் அடிப்படை விடயத்தைக் கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. எதிர்ப்புக் காட்ட வில்லையென்றால், போராடவில்லையென்றால், இனவாதத்தை அம்பலப்படுத்த முடியாது என்பதே அது.ஒரு பேரிடருக்குப் பின்னரும் மாறாத இலங்கைத் தீவின் அரசியல் யதார்த்தம் அது.


UHCOSA
Est 1994
உரும்பிராய் பாடசாலைகளின்
பழைய மாணவர் சங்கம் -கனடா
Urumpirai Schools old students Association
presents
MATH & ENGLISH
EXAMS
JK - GRADE 8
$30 FOR BOTH
JANUARY 4, 2026
@ BABA BANQUET HALL
9:30 AM
Contact us:
416-720-8690
647-710-7816
urumpiraiyouth@gmail.com
Note

Season's Greetings!



Hon.
TIM HODGSON
MP - Markham-Thornhill

16 Esna Park Drive, Unit 107, Markham ON L3R 5X1
905-479-1269 Tim.Hodgson@parl.gc.ca timhodgsonMP.ca

TK DESIGN STUDIO

Architecture | Interior | Graphics

Our Services

- Architectural Design & Solutions
- Interior Design & Material Selection
- Graphic Designing (Posters, Invitations, Video Ads)
- 2D Planning & 3D Visualization
- Resume & Logo Design





Contact: Tel: +1(942) 380-1165
Email: tkdesignstudio03@gmail.com
Instagram: @tkdesignstudio1

Carefirst Family Health Team

Accepting New Patients
புதிய நோயாளர்கள்
ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:

டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

Clinic Location:
Carefirst One-Stop Multi-Services Centre
300 Silver Star Blvd., 2/F
Scarborough, ON M1V 0G2
Tel: (416)502-2029
www.carefirstontario.ca
11/24



# அமெரிக்காவிற்கான கனடாவின் புதிய தூதுவராக தனது நண்பரான ஒருவரை நியமனம் செய்துள்ள பிரதமர் மார்க் கார்னி



அமெரிக்காவிற்கான கனடாவின் புதிய தூதுவராக தனது நண்பரான மார்க் வைஸ்மேன் என்பவரை நிய-மனம் செய்துள்ள பிரதமர் மார்க் கார்னி அவர் 2026ம் ஆண்டு பிப்ரவரி 15 ஆம் தேதி இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வார் என்றும் மார்க் வைஸ்மேன், கண்டத் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை மறுஆய்வு செய்வது குறித்து அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவார் என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மார்க் கார்னி அவர்கள் லிபரல் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பெற்ற பின்னர் பல நண்பர்களை அவர்கள் அரசியல் அனுபவம் இல்லாதவர்கள் என்பதைத் தெரிந்திருந்தும் பொதுத் தேர்தலில் போட்டியிட நிறுத்தினார் என்ற விமர்சனமும் அந்த நாட்களிலேயே எழத் தொடங்கியது.

அந்த வரிசையில் தற்போது அமெரிக்காவிற்கான கனடாவின் தூதுவராக நியமனம் செய்யப்பெற்றுள்ள வைஸ்மேன் பிரதமர் மார்க் கார்னியின் நீண்டகால நண்பர் என்றும் அவர் மார்க் கார்னியின் லிபரல் தலைமைத்துவ போட்டியில முதலில் பங்களித்தவர்களில் ஒருவர் என்றும், கடந்த பொதுத் தேர்தலின் போது தேர்தல் பிரச்சாரத்திற்கு அதிகபட்சமாக $1,750 மற்றும் லிபரல் கட்சிக்கு $1,750 நன்கொடையும் அளித்தார் என கனடிய தேசிய ஊடகங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

இந்த மாதம் தனது பதவியை பூர்த்தி செய்யும் முன்னாள் தூதுவர் கிர்ஸ்டன் ஹில்மேனுக்குப் பதிலாக அவர் வாசிங்கடன் நகரில் தனது பதவியை ஏற்றுக்கொள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

, அடுத்த ஆண்டு கனடா-அமெரிக்கா-மெக்சிகோ வர்த்தக ஒப்பந்தத்தை மறுஆய்வு செய்வதில் ஒரு புதிய குழு கவனம் செலுத்த முடியும் என்றும் பிரதமர் மார்க் கார்னி கூறினார்.

வைஸ்மேன் அவர்கள் கனடா-அமெரிக்க உறவுகளுக்கான பிரதமரின் கவுன்சிலில் உறுப்பினராக உள்ளார், டொனால்ட் டிரம்ப் இரண்டாவது முறையாக அமெரிக்க அதிபராக பதவியேற்கவிருந்த நிலையில், முன்னாள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவால் உருவாக்கப்பட்ட ஒரு அமைப்பு இதுவாகும்.
ட்ரூடோ அவர்கள் வைஸ்மேனை அந்த கவுன்சிலில் சேர்க்கவில்லை, ஆனால் மார்ச் மாதம் பிரதமராக பதவியேற்ற சில நாட்களுக்குப் பிறகு கார்னி அவரைச் சேர்த்தார்.




தற்போது 55 வயதான வைஸ்மேன், ஒன்ராறியோவின் நயாகரா பகுதியில் உள்ள பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாகம் மற்றும் சட்டத்தில் கூட்டு முதுக-லைப் பட்டம் பெற்றுள்ளார்,
, முதலில் நியூயார்க் நகரத்திலும் பின்னர் பாரிஸிலும். ஒன்ராறியோ ஆசிரியர்களின் ஓய்வூதியத் திட்டத்தின் பங்கு நிதிகளையும் அவர் நிர்வகித்தார், என்றும் மேலும் கனடா ஓய்வூதியத் திட்டத்தின் முதலீட்டு நி-தியை நிர்வகித்தார் என்றும் தெரிவிக்கப்பெறுகின்றது




Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
32
வருட சேவைகள்
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி
வீதத்தில் தங்க நகை அடகு!
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
PAWNBANK INC.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198



# தேசியத்திற்கான கூட்டா... தேர்தலுக்கான கூட்டா...?

**"தமிழரசுக்கட்சியின் சர்வாதிகாரத்தின் கீழ் தொடர்ந்தும் இருக்க முடியாதெனக்கூறி தமிழ் தேசியக்கூட்டமைப்பை உடைத்து வெளியேறி,ஜனாதிபதித் தேர்தலில் தமிழரசுக்கு எதிராக பொது வேட்பாளரை ஆதரித்தும் பாராளுமன்றத்தேர்தலில் தனித்தும் உள்ளுராட்சி சபைகளுக்கான தேர்தலில் சபைகளில் ஆட்சியமைக்க தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடன் கூட்டு வைத்தும் நேரத்திற்கேற்ப கொள்கை மாறிய ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி தற்போது மீண்டும் தமிழரசுக்கட்சியுடன் சங்கமித்துள்ளமை நிச்சயம் தமிழ் தேசியதற்கானதாக இருக்க முடியாது."**

**கே.பாலா -**

இலங்கையில் இயற்கை அனர்த்தம் ஏற்படுத்திய ரண களத்துக்கு மத்தியிலும் வடக்கிலுள்ள தமிழ் தேசிய அரசியல் கட்சிகளின் மீள் இணைவு ஒன்று "வரும் ஆனால் வராது" என்ற நிலையிலுள்ள மாகாண சபைகளுக்கான தேர்தலை இலக்கு வைத்து இடம்பெற்றுள்ளது. இலங்கையின் அரசியலில் தமிழ் தேசிய கட்சிகள் மத்தியில் எப்பொழுதும் தனக்கான இடத்தைக் கொண்டிருக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் 5 பங்காளிக்கட்சிகளின் கூட்டாக உள்ள ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையிலேயே இந்த மீள் இணைவு இடம்பெற்றுள்ளது.

பதில் தலைவராக சி.வி.கே. சிவஞானத்தையும் பதில் பொது செயலாளராக எம்.ஏ. சுமந்திரனையும் கொண்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் கூட்டு அமைத்துள்ள ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியில் ஈழமக்கள்புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈ.பி. ஆர்.எல்.எவ்.) தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ் மக்கள் விடுதலைக்கழகத்தின் தலைவர் (புளொட்) தர்மலிங்கம் சித்தார்த்தன், தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் சிவானந்தன் நவநீதராஜா, சமத்துவக் கட்சியின் தலைவர் முருகேசு சந்திரகுமார் ஆகியோர் பங்காளிக் கட்சித் தலைவர்களாகவுள்ளனர்.

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி ஐந்து கட்சிகளை உள்ளடக்கிய அமைப்பாக இயங்கி வருகிறது. தனியான யாப்பையும் சின்னத்தையும் கொண்டிருக்கும் அந்தக் கூட்டணி தேர்தல்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டதாகவும் இருக்கிறது. அதேவேளை, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியுடன் ஏற்கெனவே புரிந்துணர்வு உடன்படிக்கை ஒன்றின் அடிப்படையில் அந்தக் கூட்டணி செயற்பட்டு வருகிறது. ஆனால், அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் மாகாண சபைகள் முறைமை பாதுகாக்கப்பட வேண்டும் என்று ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி கொண்டிருக்கும் நிலைப்பாடு காரணமாக தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடன் முரண்பட வேண்டியேற்பட்டது.

நடைபெற்று முடிந்த மூன்று தேர்தல்களான ஜனாதிபதித் தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களில் வடக்கு, கிழக்கிலிருந்த தமிழ் கட்சிகள் பெரும்பாலும் தனித்தனியாகவே செயற்பட்டிருந்தன.ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் பொது வேட்பாளரைக் களமிறக்கிய போது அதற்கு எதிராக தமிழரசுக்கட்சி பகிரங்கமாகவே செயற்பட்டபோது தமிழ் பொது வேட்பாளரை ஆதரித்து முன்னிலையில் நின்று செயற்பட்டது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி . இவர்கள் பாராளுமன்றத் தேர்தலிலும் அதே கூட்டைப் பயன்படுத்தி பின்னர், உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலிலும் அதையே தொடர்ந்தனர்.

பாராளுமன்றத் தேர்தலில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி தனித்து களமிறங்கியபோதும் ஒரு பாராளுமன்ற ஆசனத்தை மட்டுமே பெற முடிந்தது .உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களின் பின்னர் ஆட்சியமைக்கும் விடயத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பக்கம் நிற்காது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பக்கம் இது சாய்ந்திருந்தது. இருந்தபோதும் சபைகளின் அதிகாரங்களைப் பெற்றுக் கொள்வதற்கான அரசியல் கூட்டாக மாத்திரம் அது அமைந்தது. அதற்கும் அப்பால் சென்று அரசியல் கூட்டணியாகத் தொடரவில்லை.

இவ்வாறாக கொள்கை, இலக்கு, எதுவுமின்றி தறி கெட்ட மாடு போல் சகல கட்சிகளுடனும் "கூட்டு" என ஒட்டிக்கொண்டு திரிந்த ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைத்தான் தற்போது இலங்கை தமிழரசுக்கட்சி தன்னுடன் இணைத்துக்கொண்டு ஏதோ பெரிதாக சாதித்துவிட்டதுபோல் கதை விட்டுக்கொண்டிருக்கின்றது. அத்துடன் கடந்த செவ்வாய்க்கிழமை இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர், இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா ஆகியோருடனான சந்திப்பிலும் இக்கூட்டு பங்கு பற்றியது.

இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணிக்கும் இடையில் நடைபெற்ற மீள் இணைவுக்கான சந்திப்பில் முக்கியமாக இரண்டு பிரதான விடயங்கள் பற்றியே அதிகம் பேசப்பட்டுள்ளது. முதலாவது மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படாமல் பிற்போடப்படும் சூழ்நிலையில் அத்தேர்தலை விரைவாக நடத்துமாறு அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுப்பதாகும். இரண்டாவது தமிழ் மக்களுக்கான நீதியான - நியாயமான அரசியல் தீர்வு சம்பந்தமாக ஒருமித்த நிலைப்பாட்டை வெளிக்கொணர்ந்து தொடர்ச்சியான சந்திப்புக்களை நடத்துவது என்பதாகவே இருந்தது.

இரண்டு விடயங்களுடனேயே தமது சந்திப்பு மட்டுப்படுத்தப்பட்டதாக இரு தரப்பிலும் கூறப்பட்டாலும் அரசியல்தீர்வு விடயத்தில் இலங்கைத் தமிழரசுக் கட்சி முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவின் காலத்தில் தயாரித்த முன்மொழிவின் அடிப்படையில் கலந்துரையாடல்களைத் தொடர்ந்தும் முன்னெடுக்க இங்கு இணக்கம் காணப்பட்டுள்ளது. இதுபற்றிய கலந்துரையாடல்களை மாதாந்தம் நடத்துவதற்கும் பல தரப்பினருடன் விரிவான கருத்துப் பரிமாற்றங்களை முன்னெடுப்பதற்கும் எதிர்பார்க்கப்படுவதாக உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு, கிழக்கு தமிழ் அரசியல் கட்சிகளைப் பொறுத்த வரையில் கடந்த மூன்று நான்கு தேர்தல்கள் அவர்களுக்குப் பல பாடங்களை புகட்டியுள்ளது. ஜனாதிபதித் தேர்தலில் நாட்டின் பல பகுதிகளில் வீசிய அநுர அலை வடக்கு,கிழக்கிலும் தாக்கம் செலுத்தியிருந்தது. எவரும் எதிர்பாராத விதமாக பாராளுமன்றத் தேர்தலில் அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்திக்கு அதிகமான ஆசனங்கள் கிடைத்தன. தமக்கிடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாடுகள் மற்றும் குறுகிய அரசியல் இலாபங்கள் காரணமாகப் பிரிந்து நின்ற தமிழ் கட்சிகளின் வாக்கு வங்கிகளில் சரிவு ஏற்பட்டது.

வடக்கு, கிழக்கில் பல உள்ளூராட்சி சபைகளை தமிழ் தேசிய கட்சிகளினால் கைப்பற்ற முடிந்தாலும் ஒப்பீட்டளவில் தேசிய மக்கள் சக்திய கணிசமான வாக்குகளைத் தனதாக்கிக் கொண்டது. இவ்வாறான பின்னணியில் நடைபெறக்கூடிய மாகாண சபைத் தேர்தலில் தொடர்ந்தும் தமிழ் கட்சிகள் பிரிந்து நின்றால் தேசிய மக்கள் சக்தி ஏனைய அரசியல் தரப்புக்களுடன் இணைந்து தமிழர் தாயகமான, தமிழ் தேசிய கட்சிகளின் அரசியல் உயிர் மூச்சான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆட்சியமைத்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இவ்வாறான பின்னணியிலேயே பொதுக் காரணிகளை முன்வைத்து ஒன்றிணைந்து செயற்படுவதற்கான முஸ்தீபுகளை தமிழ் தேசிய கட்சிகள் எடுத்திருப்பதாகத் தெரிகிறது.

இவ்வாறான நிலையில் இலங்கையின் அண்மைய அரசியல் வரலாற்றில் வடக்கிலுள்ள மக்களின் கணிசமான ஆதரவைப் பெற்ற ஜனாதிபதியாக அநுர குமார திசாநாயக்க விளங்குவது தமிழ் தேசியக் கட்சிகள் பலவற்றுக்கு சவாலாக உள்ளது. எனவே வடக்கு, கிழக்கில் தமிழ் தேசியத்திற்கு தொடர்ந்தும் சவாலாக இருக்கும் தேசிய மக்கள் சக்தியை எதிர்கொள்ள வேண்டுமானால் தமக்கிடையில் மாறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருந்தாலும் அனைவரும் ஒன்றாக இணைய வேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு தமிழரசுக் கட்சியும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியும் வந்துள்ளமை வரவேற்கத்தக்கதே. ஆனால் இக்கூட்டு எந்தளவு காலத்துக்கு நீடிக்கும் என்பதுதான் இங்குள்ள கேள்வி.

உள்ளஞூராட்சி சபைகளுக்கான தேர்தலுக்கு முன்னர் தமிழரசுக் கட்சிக்கும் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கும் இடையில்சந்திப்பு நடைபெற்றிருந்தபோதும் அது தொடர்ச்சியாக முன்கொண்டு செல்லப்பட்டிருக்கவில்லை. தமிழ்த் தேசிய அரசியல் என்றால் அது தாமே என்றதொரு தோற்றப்பாட்டை முன்வைக்கும் அரசியலையே தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்னெடுத்து வருகின்றது. வடக்கில் இடம்பெற்ற சம்பவங்கள் மற்றும் சமஸ்டியை வலியுறுத்தி தமிழகத் தலைவர்களுடன் நடத்திய சந்திப்புக்கள் மூலம் இது தெளிவாகியுள்ளது. எனவே தமிழரசுக்கட்சி - ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி கூட்டில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி ஒரு போதும் இணையப் போவதில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மீண்டும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்படுவதில் தமிழரசு கட்சிக்கு ஏற்பட்டிருக்கும் ஆர்வமும் அதற்கு ஏற்ப ஜனநாயக தமிழ்த் தேசிய கூட்டணி தமிழரசுக்கட்சியுடன் மீண்டும் இணைந்திருப்பதும் வரவேற்கப்பட வேண்டியவை. ஏனெனில் தமிழ்க் கட்சிகள் பல்வேறு அணிகளாகச் சிதறியிருப்பதால் தங்களது பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண்பதற்கான அணுகுமுறைகளைப் பொறுத்தவரை ஒருமித்த நிலைப்பாடுகளை எடுக்க முடியாமல் இருக்கிறது என்று தமிழ் மக்கள் நீண்ட நாட்களாகவே கவலையடைந்திருக்கிறார்கள். கடந்த பாராளுமன்ற தேர்தலிலும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலிலும் வடக்கிலும் கிழக்கிலும் தேசிய மக்கள் சக்திக்கு அவர்கள் பெருமளவில் வாக்களித்ததற்கான காரணங்களில் இது முக்கியமானது.

இவ்வாறான நிலையில் 2001 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு என்ற அரசியல் கூட்டணியின் பங்காளிக் கட்சிகள் 2022 ஆம் ஆண்டு பிளவடைந்து வெளியேறி பல அரசியல் பாடங்களைக் கற்றுக் கொண்ட பின்னர் மீண்டும் தற்போது தாய்க் கட்சியான தமிழரசுக்கட்சியுடன் இணைந்துள்ளமை என்பது தமிழ் தேசிய அரசியலில் முக்கிய நிகழ்வாக கருதப்பட்டாலும் இது மாகாண சபைகளுக்கான தேர்தலுக்கான மீள் இணைவாக, அரசியல் ஆதாயத்திற்கான கூட்டாக இருப்பதும் ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி ஒரு உறுதியான கொள்கையற்ற கட்சி என்பதும் இக்கூட்டு மீது அவநம்பிக்கையை ஏற்படுத்துகின்றது.

---

உலக செய்திகள் World News

# அரைகுறையாக திட்டங்களைத் துவக்கி வைத்து திமுக வெற்றுத் தம்பட்டம் அடிக்கிறது என்கிறார் நயினார் நாகேந்திரன்



கணக்கு காட்டவும், விளம்பரம் வைக்கவும் மட்டுமே திமுக ஆட்சியில் திட்டங்கள் தொடங்கி வைக்கப்படுகின்றன என்று நயினார் நாகேந்திரன் கூறியுள்ளார்.

தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது: நெல்லை சீமைக்கு வருகை தந்து பல்வேறு திட்டங்களைத் துவக்கி வைத்துள்ளதாகப் பெருமை பேசும் முதல்வர் ஸ்டாலின் அவர்களே! கடந்த அக்டோபர் மாதம் தென்காசி மாவட்டம் கூடலூர் அரசுப் பள்ளிக்குப் புதிய கட்டடங்களைத் துவக்கி வைத்தது ஞாபகம் இருக்கிறதா? தாங்கள் துவக்கி வைத்த அந்தக் கட்டடங்களில் தடுப்புச்சுவர் தொடங்கி கழிவறை வரை அடிப்படை வசதிகள் எதுவுமே இல்லாததாலும், வேறு வகுப்பறைகள் இல்லாததாலும் மரத்தடி நிழலில் மாணவர்கள் பயிலும் கொடூரம் நேர்ந்துள்ளது.

தேர்தல் நேரம் கழுத்தை நெறிக்கும் வேளையில் கணக்கு காட்டவும், காணுமிடமெல்லாம் விளம்பரம் வைக்கவும், கடைசி நேரத்தில் கமிஷன் கல்லா கட்டவும், கஜானாவை வழித்தெடுக்கவும் மட்டுமே திமுக ஆட்சியில் திட்டங்கள் தொடங்கி வைக்கப்படுகின்றன என்பதற்கு இந்தச் சம்பவமே சாட்சி! "பொருநையைப் போற்றுகிறேன்" என்னும் போர்வையில் போட்டோஷூட்டில் மட்டுமே ஆர்வம் காட்டி, அரைகுறையாக நாணகு திட்டங்களைத் துவக்கி வைத்து, சமூக வலைதளத்தில் பதிவிட்டு வெற்றுத் தம்பட்டம் அடிக்கும் தங்கள் திமுக அரசு தமது விளம்பர மோகத்தாலேயே வீழும் நாள் நெடுந்தூரமில்லை! இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# "குற்றம் கடிதல் 2" படத்தின் பின்னணி குரல் பணிகள் தொடங்கியது



தேசிய விருது பெற்ற "குற்றம் கடிதல்" படத்தின் தொடர்ச்சியான "குற்றம் கடிதல் 2" தற்போது உருவாகி வருகிறது. இப்படத்தில் முன்னணி வேடத்தில் ஜெஎஸ்கே சதீஷ்குமார் நடித்தும், தயாரித்தும் உள்ளார். தேனி, சிறுமலை உள்ளிட்ட தென்னிந்திய இடங்களில் இப்படத்தின் முக்கிய காட்சிகள் உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு அரசு பள்ளி ஆசிரியை ஓய்வு பெறும் முன் வாழ்க்கையில் எதிர்பாராத மாற்றங்களை சந்திக்கும் கதையே இப்படத்தின் மையமாகும்.

இப்படத்தில் பாண்டியராஜன், அப்புக்குட்டி, பாலாஜி முருகதாஸ், தீபக், சந்தினி தமிழரசன், வீஜி சந்திரசேகர், ஜோவிதா, ரோஷன் உள்ளிட்ட பலர் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர். இந்த நிலையில், "குற்றம் கடிதல் 2 படத்தின்" படப்பிடிப்பு பணிகள் முடிவடைந்த இரண்டு மாதங்களுக்குப் பிறகு, படத்தின் பின்னணி பணிகள் தொடங்கி உள்ளதாக படக்குழு காணொளி ஒன்றை வெளியிட்டு அறிவித்துள்ளது.

# "ரிவால்வர் ரீட்டா" படம் வருகிற 26 — ந்தேதி ஓடிடியில் வெளியீடு

கீர்த்தி சுரேஷ் கதை நாயகியாக நடித்து வெளியான படம் "ரிவால்வர் ரீட்டா". இப்படத்தை தி ரூட், தி ∴பேஷன் ஸ்டுடியோஸ் நிறுவனங்கள் இணைந்து தயாரித்துள்ளன. சரஸ்வதி சபதம் படத்தை இயக்கிய ஜே.கே. சந்துரு இப்படத்தை எழுதி இயக்கி இருந்தார். ஷான் ரோல்டன் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார்.

கடந்த மாதம் வெளியான இப்படம் ரசிகர்களிடையே போதுமான வரவேற்பை பெறவில்லை. இந்த நிலையில், "ரிவால்வர் ரீட்டா" படம் ஓ.டி.டி.யில் வெளியாவது குறித்த அறிவிப்பு தற்போது வெளியாகி உள்ளது. அதன்படி, "ரிவால்வர் ரீட்டா" வருகிற 26-ந்தேதி முதல் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகிய மொழிகளில் நெட் ∴பிளிக்ஸ் ஓ.டி.டி.தளத்தில் கண்டு களிக்கலாம்.



# மம்மூட்டி — கலித் ரஹ்மான் மீண்டும் கூட்டணி!

மலையாள சூப்பர் ஸ்டார் மம்மூட்டியின் புதிய படம் குறித்த அறிவிப்பு வெளியாகி உள்ளது. தள்ளுமலா, ஆலப்புழா ஜிம்கானா, அனுராக கரிக்கின் வெள்ளம் போன்ற படங்களை இயக்கிய மலையாளத் திரைத்துறையின் முக்கிய இளம் இயக்குநரான கலித் ரஹ்மான் இப்படத்தை இயக்குகிறார். கடந்த 2019 ஆம் ஆண்டு வெளியான "உண்டா" படத்திற்குப் பிறகு இந்த கூட்டணி இணையும் இரண்டாவது படம் இதுவாகும்.

நடிகர் உன்னி முகுந்தனின் ஆக்ஷன் த்ரில்லர் படமான "மார்கோ" படத்தை தயாரித்த கியூப்ஸ் என்டர்டெயின்மென்ட்ஸ் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது. ரஹ்மான் இயக்கும் இந்தப் படத்திற்கு நியோக் திரைக்கதை எழுதுகிறார். நடிகர்கள், மற்ற தகவல்கள் குறித்த அறிவிப்புகள் விரைவில் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# நடிகர் ஸ்ரீனிவாசன் உடல் கேரள அரசு மரியாதையுடன் அடக்கம்






கேரள மாநிலம் கண்ணூரைச் சேர்ந்தவர் ஸ்ரீனிவாசன் (வயது 69) கடந்த 48 ஆண்டுகளாக மலையாள திரையுலகில் முன்னணி கலைஞராக திகழ்ந்தவர். இயக்குனராகவும், நடிகராகவும் அறியப்பட்ட ஸ்ரீனிவாசன், திரைக்கதை ஆசிரியராகவும் செயலாற்றி வந்தவர். நகைச்சுவை மற்றும் குணச்சித்திர கதாப்பாத்திரங்கள் மூலம் தனி முத்திரை பதித்த இவர், கடந்த சில தினங்களாக உடல்நலக்குறைவால் எர்ணாகுளத்தில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.

சிகிச்சை பெற்ற வந்த நடிகர் ஸ்ரீனிவாசன் காலமானார். இவரது மறைவு திரையுலகினர் மத்தியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. இவரது மறைவுக்கு திரைப்பிரபலங்கள் மற்றும் ரசிகர்கள் என பல்வேறு தரப்பினரும் இரங்கல் தெரிவித்து வருகின்றனர். நடிகர்கள் மோகன்லால், மம்முட்டி, சூர்யா உள்ளிட்ட திரையுலகினர் பலரும் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினர். தமிழில் லேசா லேசா, புள்ளக்குட்டிக்காரன் உள்ளிட்ட படங்களில் இவர் நடித்துள்ளார்.

இதையடுத்து ஸ்ரீனிவாசனின் சொந்த ஊரான எர்ணாகுளம் மாவட்டத்தின் உதயம்பேரூரில் உள்ள அவரது வீட்டில் அரசு மரியாதையுடன் உடல் அடக்கம் செய்யப்பட்டது.

# சிரியாவில் ஐ.எஸ். பயங்கரவாதிகளை குறிவைத்து அமெரிக்கா அதிரடி தாக்குதல்




சிரியாவில் ஐ.எஸ். பயங்கரவாதிகளை ஒழிக்க அந்நாடு அரசுப்படையுடன், அமெரிக்க படைகளும் இணைந்து செயல்பட்டு வருகின்றன. இதனிடையே, சிரியாவின் பெல்யரா நகரில் ஐ.எஸ். பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 2 ராணுவ வீரர்கள் உள்பட 3 அமெரிக்கர்கள் கொல்லப்பட்டனர்.

இந்த தாக்குதலுக்கு தக்க பதிலடி கொடுக்கப்படும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் கூறியிருந்தார். இந்நிலையில், சிரியாவில் ஐ.எஸ். பயங்கரவாதிகளை குறிவைத்து அமெரிக்கா அதிரடி தாக்குதல் நடத்தியுள்ளது. சிரியாவில் 70க்கும் மேற்பட்ட இடங்களில் ஐ.எஸ். பயங்கரவாதிகளை குறிவைத்து அமெரிக்க விமானப்படை மிகப்பெரிய அளவில் தாக்குதல் நடத்தியுள்ளது.

அமெரிக்க விமானப்படையுடன் சேர்ந்து ஜோர்டான் விமானப்படையும் தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த தாக்குதலில் எத்தனை ஐ.எஸ். பயங்கரவாதிகள் உயிரிழந்தனர் என்பது குறித்த விவரம் இதுவரை வெளியாகவில்லை.

# உக்ரைன் மீது ரஷியா அதிரடி தாக்குதல் — 8 பேர் உயிரிழப்பு



உக்ரைன், ரஷியா இடையே இன்று 1 ஆயிரத்து 395வது நாளாக போர் நீடித்து வருகிறது. இந்த போரில் ஆயிரக் கணக்கானோர் உயிரிழந்துள்ளனர். இப்போரில் உக்ரைனுக்கு அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகள் ஆதரவு அளித்து வருகின்றன. அதேவேளை, போரை முடிவுக்கு அமெரிக்க அதிபர் டிரம்ப் முயற்சித்து வருகிறார். அதன்படி, போர் நிறுத்தம் தொடர்பாக 28 நிபந்தனைகள் கொண்ட உடன்படிக்கையை டிரம்ப் முன்மொழிந்துள்ளார். இந்த நிபந்தனைகளில் சிலவற்றை ஏற்க உக்ரைன் மறுத்து வருகிறது. இதனால் போர் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்நிலையில், உக்ரைனின் ஒடிசா நகர் மீது ரஷியா ஏவுகணை தாக்குதல் நடத்தியது. ஒடிசா நகரில் உள்ள துறைமுகம், துறைமுகம் அருகே உள்ள குடியிருப்பு பகுதிகளை குறிவைத்து நடத்தப்பட்ட இந்த தாக்குதலில் 8 பேர் உயிரிழந்தனர். மேலும், 27 பேர் படுகாயமடைந்தனர்.

# அடுத்த ஆண்டில் உலகின் முதல் ட்ரில்லியனர் எலான் மஸ்க் படைக்கப்போகும் புதிய உலக சாதனை



டெஸ்லா மற்றும் ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனங்களின் அபரிமிதமான வளர்ச்சியால், எலான் மஸ்க் அடுத்த ஆண்டுக்குள் 1 லட்சம் கோடி டாலர் சொத்து மதிப்பு கொண்ட உலகின் முதல் மனிதர் என்ற சாதனையைப் படைப்பார் எனப் பொருளாதார வல்லுநர்கள் கணித்துள்ளனர். எலான் மஸ்க். ஸ்பேஸ் எக்ஸ், டெஸ்லா, எக்ஸ் வலைத்தளம், எக்ஸ் ஏ.ஐ., ஸ்டாலிங்க் உள்ளிட்ட பிரபல உலக நிறுவனங்களின் நிறுவனராகவும், தலைவராகவும் இருந்து வருகிறார்.

எலான் மஸ்கின் தற்போதைய சொத்து மதிப்பானது ஜெப் பெசோஸ், மார்க் ஜுக்கர்பெர்க், பில் கேட்ஸ் மற்றும் வாரன் பபெட் ஆகியோரின் மொத்த சொத்துக்களை விடவும் அதிகமாக உயர்ந்துள்ளது. மார்க் ஜுக்கர்பெர்க் முதல் டெய்லர் ஸ்விப்ட் வரை உலகின் முன்னணி 7 செல்வந்தர்களின் சொத்துக்களை ஒன்றிணைத்தாலும், எலான் மஸ்கின் தனிப்பட்ட சொத்து மதிப்பு அதையும் மிஞ்சி புதிய உச்சத்தைத் தொடும் என கூறப்படுகிறது.

# தையிட்டி போராட்டத்தில் பொலிசாரின் சித்திரவதை தொடர்பில் சர்வதேச துதுவராலயங்களுக்கு முறையிடப்பட்டுள்ளது என்கிறார் தவிசாளர் தியாகராஜா நிரோஷ்



தையிட்டி சட்டவிரோத விகாரைக்கு எதிராக அமைதி வழியில் ஜனநாயக ரீதியாக போராடிய எம்மை அரச அறிவுறுத்தலின் பேரில் பொலிசார் கடுமையாக சித்திரவதை செய்துள்ளனர். சட்டம் ஒழுங்கை பாதுகாக்கவேண்டிய பொலிசாரின் இம் மிலேச்சத்தனமான பாரதூரமான மனித உரிமை மீறல்கள் தொடர்பில் நீதியான அணுகுமுறைகளுக்காக அழுத்தத்தினைப் பிரயோகிக்குமாறு வெளிநாட்டுத் துதுவராலயங்கள் மற்றும் சர்வதேச மனித உரிமைகள் ரீதியிலான பொறிமுறைகளுக்கும் அரசுக்கு உதவி அளிக்கும் நிறுவனங்களுக்கும் வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ் கோரியுள்ளார்.

இலங்கையில் தமக்கு எதிராக இடம்பெற்ற சித்திரவதைகள் தாம் பௌத்த சிங்கள ஆக்கிரமிப்பினை எதிர்த்த வேளை இடம்பெற்ற தாக்குதல்கள் என்பதால் இலங்கை அரச கட்டமைபினுள்ளாக
ஒருபோதும் நீதி கிட்டாது என்பதை நாம் உணர்கின்றோம். அரச கொள்கையும் சட்டங்களும் சட்ட அமுலாக்கமும் பௌத்த சிங்கள பேரினவாத ஆக்கிரமிப்பிற்கு வலுச்சேர்ப்பவையாகவே பேணப்படுகின்றன. யாரும் எதிராக அமையக்கூடாது என்பதில் ஒழுங்கமைக்கப்பட்ட கட்டமைப்பே இலங்கையில் நடைமுறையில் உள்ளது. எந்த அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோதும் மாற்றமின்றி இந் நிலை தொடர்கின்றது. பௌத்த பேரினவாத விஸ்தரிப்பிற்கு எதிராக கடந்த காலத்தில் கௌரவ நீதிமன்றங்களின் தீர்ப்புக்கள் கூட இந் நாட்டில் நடைமுறைப் படுத்தப்படுவதில்லை.

தையிட்டியில் நேற்று வலிகாமம் வடக்கு பிரதேச சபை ஏகமனதாக முன்னெடுத்த சபைத் தீர்மானத்தின் அடிப்படையில் பகிரங்க அகிம்சை வழி போராட்டத்திற்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது. அப் போராட்டத்தில்
கௌரவ நீதிமன்றின் உத்தரவுகளை மதித்தே நாம் போராடினோம். அவ்வாறாகப் போராடிய போது எம்மீது பொலிசார் பிரயோகித்த சித்திரவதையினையும் மனித குல நாகரீகத்திற்குப் ஏற்புடையதல்லாத நடவடிக்கைகள் தொடர்பாகவும் இலங்கையில் உள்ள பிரதான நாடுகளின் வெளிநாட்டுத் தூதுவராலயங்கள், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் தொடர்பான நிறுவனங்கள், சித்திரவதைக்கு எதிரான சர்வதேச தாபனங்கள், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள், உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள மனித உரிமைகள் நிறுவனங்கள் மற்றும் ஏனைய தாபனங்களுக்கும் இவ்விடயம் பற்றி போதிய ஆதாரங்களுடன் முறையிட்டுள்ளோம்.

இராணுவமயமாக்கத்தின் கீழ் பொதுமக்களுக்குச் சொந்தமான தனியார் காணிகளில் அரச அனுசரனையுடன் இனங்களுக்கிடையே நல்லிணக்கத்தினை பாதிக்கும் வகையில் கட்டப்பட்டுள்ள சட்டவிரோத விகாரைக்கு எதிராகவே நாங்கள் தொடர்ச்சியாக போராடிவருகின்றோம். அரசாங்கம் இவ்வாறான நீதிகோரிய அகிம்சை ரீதியிலான போராட்டங்கள் மீது அடக்கு முறையினையும் மக்களிடத்தில் அச்சத்தினையும் ஏற்படுத்தும் நோக்கில் பொலிசாரை ஏவிவிட்டு சித்திரவதை செய்து வருகின்றமை உடன் நிறுத்தப்படவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது.

Historical and Cultural Studies UNIVERSITY OF TORONTO SCARBOROUGH | UNIVERSITY OF TORONTO SCARBOROUGH | Library

**Celebrate Tamil Heritage month at the University of Toronto Scarborough! - 2026/01/24**

**Mark your calendars for a day of scholarship, heritage, and community. All are welcome.**

**Digital Tamil Studies Symposium**
Presentations exploring projects at the crossroads of Tamil collections and digital research.

**Community Archiving Mixer & Panel**
Discussions on "Archives as Activism" & "Documentary Heritage of Tamil Speaking Communities: Content and Practice"

**Pop-up Archival Exhibit**
Explore the Tamil historical resources cared for at the UTSC Library and made openly available to researchers and the public.

**Public Lecture**
The Art of Archiving: Art, Memories and Heritage in post armed conflict Sri Lanka.
Prof. Sanathanan, University of Jaffna, Sri Lanka

Student-led Musical Performance

**Hybrid, Bilingual Event!** **All are welcome!**

**Learn more & register: https://uoft.me/tamilstudies26**

## கண்ணீர் அஞ்சலி #79

### திரு. சரவணபவன் ஜெகதீசன்



மலர்வு: 14-09-1943 உதிர்வு: 12-12-2025

எங்கள் OSTBA உறுப்பினர் #360
28-09-2025 அன்று இறைவனடி சேர்ந்தார். அவரது ஆத்மா அமைதியும் இறைவனின் பாதத்தை அடைய பிரார்த்திப்போம்.

Ontario Senior Tamils Benevolent Association
info@ostba.ca www.ostba.ca
416-473-6880

## கண்ணீர் அஞ்சலி #80

### திருமதி. கனகமலர் சண்முகநாதன்



மலர்வு: 20-04-1953 உதிர்வு: 19-12-2025

எங்கள் OSTBA உறுப்பினர் #372
19-12-2025 அன்று இறைவனடி சேர்ந்தார். அவரது ஆத்மா அமைதியும் இறைவனின் பாதத்தை அடைய பிரார்த்திப்போம்.

Ontario Senior Tamils Benevolent Association
info@ostba.ca www.ostba.ca
416-473-6880

# இவ்வார ராசிபலன்

## 26-12-2025 வெள்ளி தொடக்கம் 01-01-2026 வியாழன் வரையும்




மேஷம்: மங்கையர் சிலருக்கு மகப்பேறு கிடைக்கும் வாரம். பணியில் கவனம் தேவை. கலைஞர்களுக்கு திருப்புமுனையான காலம். தொழிலாளர்களுக்கு வாய்ப்புக்கள் கிடைக்கும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். புதிய கடன் வாங்க நேரிடும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். மனக்குழப்பம் தீரும். பொருளாதார நிலை உயரும். தொட்டக் காரியம் ஜெயமாகும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. நீண்ட நாளைய நோய் விலகும். பணவரவு திருப்தி தரும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். இல்லத்தில் அமைதி கூடும். சுமூகமான சூழ்நிலை பெருகும். தேகப்பலம் கூடும். உடல்நலம் சீராகும். குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. சுபக்காரியம் கைக்கூடும். தொழில் முயற்சி வெற்றி தரும். வறுமைகள் அகலும். வெளியூர் பயணம் உண்டு. தந்தையின் உடல் நலத்தில் கவனம் தேவை. வாகனங்களில் முதலீடு உண்டாகும். பங்குச்சந்தை லாபம் தரும். மனதில் உற்சாகம் அதிகரிக்கும். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. எதிர்பார்த்த பதவி உயர்வு கிட்டும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். நண்பர்களால் நன்மையுண்டு. விரக்திகள் மறையும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். பேச்சில் நிதானம் தேவை. வங்கி சேமிப்பு உயரும். முத்தான வாய்ப்பு பெருகும். சுபகாரியங்கள் நடந்தேறும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். கல்வியில் கவனம் தேவை. கடன் வசூலாகும். புத்தி சாதுர்யம் பெருகும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். அணிமணிகள் சேரும். திருமண தீபம் சுடர்விடும். பணம் புரளும். வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ கனக துர்க்கை அம்மன் அதிர்ஷ்ட எண்: 3, 9, 6, 5 அதிர்ஷ்ட நிறம்: வெளிர் நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z, L




ரிஷபம்: மனக்கவலைகள் விலகும் வாரம். பாதகமான சூழ்நிலைகள் அகலும். கணவன், மனைவி உறவு மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். உடல்நலம் சீராகும். சகோதரியினால் நன்மை உண்டு. அரசு வழி-யில் ஆதாயம் உண்டு. பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். பதவி உயர்வு கிட்டும். வேண்டாத விஷயங்கள் விலகும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். தொழில் அபிவிருத்தி அடையும். வாயில் தேடி வரன் வரும். பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். பெற்றோர்களின் ஆசி கிட்டும். பெண்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெற்றோர் உடல்நலத்தில் அக்கறை தேவை. காதலர்களுக்குள் மனக்கசப்பு நீங்கும். திருப்தி பெருகும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். பழைய பகை தீரும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். தர்மச் சிந்தனைகள் மேலோங்கும். உத்தியோகத்தில் மதிப்பும், மரியாதையும் உயரும். பெண்களின் ஆலோசனை பயன் தரும். நட்டமில்லாத நன்மைகள் அதிகரிக்கும்.

வெளிநாட்டுப் பயணம் லாபம் தரும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். புது முயற்சிகளை தள்ளி வைக்கவும். விளையாட்டில் கவனம் தேவை. மாற்று யோசனை பயன் தரும். வருமானம் திருப்தி தரும். காதலர்கள் தம்பதியாவார்கள். தொலைதூரப் பயணம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அதிர்ஷ்ட எண்: 5, 3, 2, 7 அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O, Z




மிதுனம்: கண்ணியமும், புண்ணியமும் சேரும் வாரம். மனோ பயம் அகலும். வாழ்க்கையில் பிடிப்பு அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் தரும். பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். புண்ணியக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். சுறுசுறுப்பு பெருகும். சொத்துக்களால் லாபம் உண்டாகும். கலவரமான சூழ்நிலை காணப்படும். வஸ்திர தானம் செய்வதால் வளங்கள் சேரும். தகுதிகள் மிகுதியாகும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். மன நெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டாகும். வீண் வம்புகள் ஒழியும். பால்ய நண்பர் சந்திப்புக் கிட்டும். பயணம் வெற்றி தரும். ஆபரணச்சேர்க்கை உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். இல்லத்தில் நல்ல காரியம் நடைபெறும். வாழ்வில் வசந்தம் கூடும். கனவுகள் பலிதமாகும். குடும்ப கௌரவம் உயரும். பேச்சில் நிதானம் தேவை. வளமான சிந்தனை உதயமாகும். ஆசிரியர்களுக்கு அற்புதமான வாய்ப்பு வரும். பூமியால் லாபம் உண்டு. நூதன பொருள் சேர்க்கையுண்டு. பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். குடும்பத்தில் பல வகைகளில் நன்மை ஏற்படும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வெளியூர் பயணம் வெற்றி தரும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். பெருமிதம் நிறைந்த காலம். இடையூறுகள் அகலும்.

வழிபட வேண்டிய தெய்வம்: திருத்தணி முருகப்பெருமான் அதிர்ஷ்ட எண்: 2, 9, 8, 6 அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S, K

கடகம்: சினத்தைத் தவிர்க்க வேண்டிய வாரம். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். மருத்துவச் செலவுகள் குறையும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. கமிஷன் தொழில் லாபம் தரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புதிய முயற்சிகள் பலன் தரும். போட்டி, பொறாமைகள் விலகும். வருமானம் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு.




மாற்று யோசனை பயன் தரும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். வயிற்று சம்பந்தமான நோய் வந்து நீங்கும். மகிழ்ச்சியான செய்தி வரும். தொழில் அபிவிருத்தி அடையும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். உற்சாகம் களைகட்டும். வேண்டாத உறவு-களை தவிர்க்கவும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். புத்துணர்வோடு செயல்படுவது நல்லது. பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. மாணவர்கள் திறமை பளிச்சிடும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உதவிகள் கிடைக்கும். அரசு வாய்ப்பு தடைப்படும். சகோதர உதவி கிட்டும். இலக்கிய ஆர்வம் கூடும். முயற்சிகள் வெற்றி தரும். தாய், தந்தை உதவி உண்டு. சுபச்செலவுகள் அதிகரிக்கும். மனை வாங்கும் ஆர்வம் அதிகரிக்கும். ஆறுதலான சூழ்நிலை அமையும். திருமகள் கிருபை உண்டு. பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். வழக்குகள் முடிவுக்கு வரும். ஏற்றமும்ரூபவ் மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். நலம் காணும் வாரம். திடீர் திருப்பம் ஏற்படும். வழிபட வேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான் அதிர்ஷ்ட எண்: 6, 9, 2, 4 அதிர்ஷ்ட நிறம்: சிகப்பு (செந்நிறம்) அதிர்ஷ்ட எழுத்துக்கள்: C, Q

சிம்மம்: உற்சாகத்தோடு செயல்படும் வாரம். ஆடை அணிகலன் சேரும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. உடல்நிலையில் கவனம் தேவை.




எண்ணங்கள் மாறுபடும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். விருப்பமான தொழில் அமையும். கடன் சுமை குறையும். பணியில் ஆர்வம் ஏற்படும். பெரிய வாய்ப்புக்கள் தேடி
வரும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். கன்னிப்பெண்களிடம் செயல்களில் துணிவு கூடும். மகான்களின் சந்திப்பு கிட்டும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். மனைவியின் பிரார்த்தனை மாற்றத்தை ஏற்படுத்தும். குடும்ப கௌரவம் உயரும். ஆலோசனை பலன் தரும். மற்றவர்களால் அனுகூலம் உண்டு. வாகன செலவு ஏற்படும். புதிய நட்பு உருவாகும். இடமாற்றம் நன்மை தரும். விருந்தினர் வருகை உற்சாகம் தரும். வீடு தேடி வெற்றி வரும். கலைத்துறையில் முன்னேற்றம்




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"
Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377


கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். பொருளாதார வளம் மேம்படும். திருமண வாய்ப்பு கூடி வரும். துணிவோடு செயல்படுவீர்கள். சொத்துச் சேர்க்கை உண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு.

கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். முன்கோபம் தவிர்க்கவும். மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். பிரச்சனை முடிவுக்கு வரும். பறவைகளுக்கு உணவளித்து பலன் பெறலாம். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். மனதில் உற்சாகம் கூடும். மாணவர்களுக்கு மகிழ்ச்சி கூடும். மெத்தனப் போக்கு விலகும். பேச்சில் இனிமை கூடும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். வழிபட வேண்டிய தெய்வம்: வீரமுக ஆஞ்சநேயர் அதிர்ஷ்ட எண்: 1, 4, 5, 9 அதிர்ஷ்ட நிறம்: வைலட் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R J

கன்னி: பெண்களால் ஆதாயம் வரும் வாரம். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். புதிய நட்பு ஏற்படும். விவசாயம் பலன் தரும். அரசு வழி ஆதாயம் உண்டு. குடும்ப அன்யோன்யம் கூடும். நண்பர்களால் உதவி உண்டு. சுபச்செலவு அதிகரிக்கும். கடன் பிரச்சனைகள் அகலும். கவலைகள் ஒழியும். பால் தானம் பாக்கியம் சேர்க்கும்.




அனுகூலமான காலம். பூமியால் லாபம் உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகமான சூழ்நிலை விலகும். கல்வியில் ஆர்வம் கூடும். குதூகலமான மனநிலை காணப்படும். புத்திரர்களால் மேன்மை உண்டு. அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். ஆடம்பர சுகங்கள் கூடும். முயற்சிகள் பலன் தரும். மங்களச் செய்திகள் வரும். கமிஷன் தொழில் லாபம் தரும். மருத்துவச் செலவு உண்டு. பொன், பொருள் சேரும். பாராட்டுக்கள் குவியும். வெளியூர் பயணம் வெற்றி தரும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும். திடீர் லாபம் உண்டு. திருமண வாய்ப்புக் கூடி வரும். பேச்சில் நிதானம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோக ஈடுபாடு குறையும். ஆபரணச் செலவுகள் கூடும். யோகமான காலமாக அமையும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். தொழில் மேன்மை உண்டு. காதல் கசக்கும். திருத்தமான முடிவு ஏற்படும். வருத்தங்கள் மறையும். அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் கூடி வரும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். திட்டம் வெற்றி பெறும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். ஆபரணப் பொருள் களவு போகும். அனுகூலச் செய்தி வந்து சேரும். வாயில் தேடி வாய்ப்பு வரும். காரியங்கள் கைகூடும். வங்கிச்சேமிப்பு உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கற்பக மூர்த்தி அதிர்ஷ்ட எண்: 9, 5, 3, 2 அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K, G

துலாம்: பயணத்தால் அனுகூலம் தரும் வாரம். விவேகமான பேச்சுக்களால் தொல்லைகள் அகலும். திறமைகள் வெளிப்படும். ஊக்கம் அதிகரிக்கும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். மன நெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால்




முன்னேற்றம் உண்டு. தாய்ப்பாசம் அதிகரிக்கும். பணவரவு பெருகும். வம்புதும்புகள் ஒழியும். நீண்ட நாளைய ஆசை நிறைவேறும். தொலைதூரப் பயணம் ஏற்படும். பணியார்களின் ஒத்துழைப்பு கிட்டும். விவசாயிகள் கோரிக்கைகள் நிறைவேறும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். வியாபாரம் விருத்தியாகும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். தொழில் போட்டி மறையும். உறவினரால் உதவிகள் கிட்டும். ஆபத்துக்கள் விலகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். இல்லத்தில் மேன்மைகள் ஏற்படும். பொது வாழ்வில் புகழ் கூடும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். அந்நிய தேசப் பயணம் உண்டு. அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. வாழ்த்துச் செய்திகள் வரும். தர்மச் சிந்தனை மேலோங்கும். விளையாட்டுத் துறையில் வெகுமதி உண்டு. பழைய பகை தீரும். கடன் அமையும். அணிமணிகள் சேரும். திருமண தீபம் சுடர் விடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். எதிலும் வெற்றி கிட்டும். குடும்பத்தில் மகிழ்ச்சிப் பொங்கும். ஏற்றங்கள் அதிகரிக்கும். உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும். வாழ்க்கைத் துணையால் வளம் பெருகும். கொடுக்கல், வாங்கலில் சுமூக நிலை ஏற்படும். மனதில் தெம்பும், தைரியமும் கூடும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். நினைத்தது நடக்கும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். வழிபட வேண்டிய தெய்வம்: வீர அண்ணாமலையார் அதிர்ஷ்ட எண்: 7, 9, 2, 4 அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D, T

விருச்சிகம்: வெற்றிச் செய்தி வரும் வாரம். இளைஞர்களுக்கு படிப்பிற்கு ஏற்ப உத்தியோகம் கிட்டும். நீண்ட தூரப்பயணம் லாபம் தரும். கணவன், மனைவி உறவு இனிக்கும். பங்குச்சந்தை லாபம் தரும். செய்த்தொழிலில் முன்னேற்றம் உண்டு. புதிய வாகனங்களால் முதலீடு உண்டாகும். அரசியல்வாதிகள், ஆன்மீகவாதிகள் உத்தியோகஸ்தர்கள் ஏற்றம் பெறுவார்கள். பிள்ளைகள் வழியில் மகிழ்ச்சி கிட்டும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மேலோங்கும். வேண்டும் வரம் கிட்டும். நட்பு வட்டம் விரிவடையும். வெளிநாட்டுத் தொடர்பு ஆதாயம் தரும். புதுமைகள் நிறைந்த காலம். நீண்ட நாளைய நோய் விலகும். பெண்களின் விருப்பம் ஈடேறும். உள்ளம் மகிழும்.




வெளிவட்டாரப் பழக்கங்கள் அதிகமாகும். உல்லாசப் பயணம் இனிக்கும். எதிர்கால தேவைகள் பூர்த்தியாகும். தெளிவான முடிவுகள் உதயமாகும். மனிதநேயம் மிகுதியாகும். வயிற்று உபாதைகள் வந்து போகும். பெற்றோர்களால் பெருமை சேரும். தெய்வத் திருப்பணியில் ஆர்வம் கூடும். தடைகள் விலகும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். தேக ஆரோக்கியம் மிளிரும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும். வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். பங்குச்சந்தை லாபம் தரும். நண்பர்கள் சந்திப்பு நன்மை
பயக்கும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். உழைப்பு கடுமையாக இருக்கும். விரக்திகள் விலகும். வாயில் தேடி வாய்ப்புக்கள் வரும். வரவுகள் மிகுதியாகும். சுறுசுறுப்பு அதிகமாகும். காலை நேரத்தில் இனிய செய்திகள் வரும். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணியம் சேரும். வேதனைகள் சாதனையாகும். பெண்களால் பெருமை சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான் அதிர்ஷ்ட எண்: 2, 9, 8, 1 அதிர்ஷ்ட நிறம்: அடர்ந்த சிவப்பு அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G, L




தனுசு: தந்தை வழி உறவுகளால் பெருமை சேரும் வாரம். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் உண்டு. வியாபாரத்தில் வேகம் கூடும். வாயில் தேடி வரன் வரும். ஆசைகள் நிறைவேறும். பணமும், பாராட்டும் சேரும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். வெளியூர் பயணம் வெற்றி தரும். சொத்துக்கள் வில்லங்கம் விலகும். கனிவான பேச்சு அவசியம். மருத்துவச் செலவு குறையும். மதிநுட்பம் மாபெரும் வெற்றித் தரும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் உண்டு. ஆசிரியர்களுக்கு அற்புதமான காலம். நூதன பொருள் சேர்க்கையுண்டு. போட்டி, பொறாமைகள் விலகும். சமுதாய விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. உடல்நலம் சீராகும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். நம்பிக்கை துளிர்விடும். வருமானம் திருப்தி தரும். காதலர்களுக்குள் கையிருப்பு கரையும். பணியாளர்களின் ஒத்துழைப்புக் கிட்டும். வியாபாரம் விருத்தியாகும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். இன்றைய பிரார்த்தனை நன்மையைக் கூட்டும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். நண்பர்களால் பாராட்டு கிடைக்கும். சிந்தனை மேலோங்கும். பாகப்பிரிவினை ஏற்படும். பழைய பாக்கிகளும் வசூலாகும். ஏற்றுமதி தொழிலில் லாபம் தரும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். பித்ருக்கள் சாபம் நீங்கும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். வழிபட வேண்டிய தெய்வம்: மீனாட்சி அம்மன் அதிர்ஷ்ட எண்: 9, 5, 4, 3 அதிர்ஷ்ட நிறம்: ஊதா நிறம் அதர்ஷ்ட எழுத்துக்கள்: F, P (தொடர்ச்சி 17ம் பக்கம்)

# RE/MAX Ace Realty Inc. Brokerage வீடு விற்பனை முகவர் நிறுவனம் சிறப்பாக நடத்திய வருடாந்த விற்பனை விருதுகள் வழங்கும் வைபவம்!











கனடாவில் தமிழர்களால் நிர்வகிக்கப்பெறும் வீடு விற்பனை முகவர் நிறுவனங்களில் நன்கு அறியப்பெற்ற ஒன்றாக விளங்கும் **RE/MAX Ace Realty Inc. Brokerage** நிறுவனம் 21-12-2025 ஞாயிற்றுக்கிழமை சிறப்பாக நடத்திய வருடாந்த விற்பனை விருதுகள் வழங்கும் வைபவத்தில் நூற்றுக்கணக்கான வீடு விற்பனைப் பிரதிநி-திகள் மற்றும் முகவர்கள் ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

நிறுவனத்தின் பங்காளர்களில் திருவாளர்கள் ஸ்ரீ நடராஜசுந்தரம்-விஜேய் செல்வநாயகம்- செல்வன் காசிப்பிள்ளை மற்றும் வாகீசன் ஜெயவீரசிங்கம் ஆகியோர் தங்கள் அலுவலப் பணியாளர்கள் மற்றும் உதவியாளர்களோடு இணைந்து விருதுகள் வழங்கும் விழாவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செயதிருந்தார்கள். ஸ்காபுறோவில் உள்ள பிரைட்டன் கொக்வென்சன் சென்றர் மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி வைபவத்திறகு பாராளுமன்ற உறுப்பினர் சல்மா சாகிட் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றி அனைவரையும் பாராட்டிச் சென்றார்.

விற்பனை விருதுகளைப் பெற்ற பல முகவர்கள் மேடையில் தங்களுக்குரிய வெற்றியாளர் விருதுகளைப் பெற்றுச் சென்றனர்.

மேற்படி விழாவில் முக்கிய அம்சமாகவும் போற்றக்கூடிய ஒரு சமூகப் பணியாகவும் குறிப்பிடக்கூடியதாக ஸ்காபுறோவில் மிக விரைவில் அமையவுள்ள "தமிழர் சமூக மையத்தின்" கட்டட நிதிக்காக சுமார் 20 வீடு விற்பனை முகவர்கள் தலா 10 ஆயிரம் டாலர்கள் வீதம் வழங்கி தங்கள்

சமூகத்திற்கும் **RE/MAX Ace Realty Inc. Brokerage** நிறுவனத்திற்கும் பெருமையைச் சேர்த்துக் கொண்டார்கள்.

தமிழர சமூக மையத்திற்குரிய நிதி அன்பளிப்புக்களை அதன் சார்பில் சாந்தா பஞ்சலிங்கம் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

---செய்தி சத்தியன்

## இவ்வார ராசிபலன்


(16ம் பக்கத் தொடர்ச்சி)




மகரம்: மகிழ்ச்சி செய்தி வரும் வாரம். இடமாற்றம் நன்மை தரும். பெரியோர்களின் வாழ்த்து கிடைக்கும். உடன்பிறப்புக்களால் உதவி உண்டு. பணவரவு திருப்தி தரும். பொது வாழ்வில் புகழ் கூடும். செயல்பாட்டின் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. இனம் புரியா சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். எதிரிகள் உதிரியாவார்கள். தொட்டக்காரியம் ஜெயமாகும். நீண்ட நாளைய நோய் விலகும். சேமிப்பு வளரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. வியாபாரம் வெற்றி தரும். வெளியூர் பயணம் உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். பேச்சில் நிதானம் தேவை. பொருளாதார நிலை உயரும். வரவுகள் அதிகரிக்கும். நல்லவர்

நட்பு கிட்டும். தோற்றப் பொலிவு கூடும். பணத்தட்டுப்பாடு ஏற்படும். சகோதர உதவி கிட்டும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். பொறியியல் துறை லாபம் தரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். அயல்நாட்டு பயணம் உண்டு. ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புதிய முயற்சிகள் பலன் தரும். கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கிகள் வசூலாகும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். பெரியோர்களின் பாராட்டுக் கிடைக்கும். பெண்களுக்கு பெருமை சேரும். யோக பலன் கூடும். வம்பு வழக்குகள் தீரும். எண்ணங்கள் வண்ணமயமாகும். புதிய முயற்சிகளை தள்ளி வைக்கவும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும்.


வழிபட வேண்டிய தெய்வம்: அதிதேவதை அதிர்ஷ்ட எண்: 6, 9, 5, 4 அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T, D




கும்பம்: பணவரவு அதிகரிக்கும் வாரம். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். அரசு வழியில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழிலில் லாபம் அதிகரிக்கும். எதிரிகள் உதிரியாவார்கள். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். மாற்றங்கள் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். புதிய தொழில் வாய்ப்பு வரும். மனக்கசப்பு நீங்கும். பெண்களுக்கு வேலைப்பளு அதிகரிக்கும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். செல்வாக்கு மேம்படும். விளையாட்டுத் துறையில் லாபம் தரும். நிதானத்தோடு செயல்பட வேண்டும். மங்களச் செய்திகள் வரும். பித்ருக்கள் சாபம் நீங்கும்.

பெண்களின் ஆலோசனைகளால் ஆதாயம் பெருகும். முன் கோபத்தை குறைக்க வேண்டும். தொழில் முயற்சி வெற்றி தரும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். பிள்ளைகளின் தொல்லைகள் அகலும். ஆக்கப்பூர்வ எண்ணம் உதயமாகும். தொழிலாளர்களுக்கு மன நிறைவு உண்டு. கடன் பிரச்சனைகள் நீங்கும். புத்தி சாதுர்யம் பெருகும். செய்த்தொழில் லாபம் சிறக்கும். பணத்தேவைகள் பூர்த்தியாகும். மன ஆரோக்கியம் சிறக்கும். வாழ்க்கைத்துணையால் வளம் பெருகும். கட்டிடத் தொழிலாளர்களுக்கு லாபம் அதிகரிக்கும். பயண முயற்சி பலன் தரும். உத்தியோகத்தில் நல்லபெயர் கிட்டும். தெய்வப்பணிகளில் ஈடுபாடு கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குபேர பகவான் அதிர்ஷ்ட எண்: 2, 9, 4, 6 அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம் அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X, H




மீனம்: பணியில் பாராட்டு கிடைக்கும் வாரம். வாகனச் செலவு ஏற்படும். புதிய முயற்சியில் ஈடுபடலாம். அலைச்சல் குறையும். மன நிம்மதி குறையும். தன சேர்க்கை உண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். உயர்வுகள் தாமதமாகும். ஆதாயம் பெருகும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். நண்பகலில் நல்ல தகவல் வரும். வேலைப்பளு அதிகரிக்கும். அத்தியாவசிய செலவுகள் அதிகரிக்கும். தான தர்மங்கள் பலன் தரும். வழக்குகள் தள்ளிப்போகும். உடல்பொலிவு கூடும். புதிய முதலீடு தவிர்க்கவும். செல்வாக்கு உயரும். வரவு திருப்தி தரும். உடன்பிறப்புக்களால் ஆதாயம் உண்டு. முயற்சிகள் பலன் கொடுக்கும். ஆரோக்கியம் சீராக இருக்கும். பூமியால் நன்மை உண்டு. வியாபாரிகளுக்கு லாபம் அதிகமாகும். எதிர்ப்புக்கள் தவிடுபொடியாகும். திட்டமிட்ட காரியம் வெற்றி பெறும். பாராட்டுக்கள் கூடும். மாலை நேரத்தில் கவனம் தேவை. அத்தியாவசிய தேவைகள் பூர்த்தியாகும். நீண்ட கால எண்ணம் நிறைவேறும். உதவிகள் குவியும். வாழ்க்கைத் தரம் உயரும். பொன், பொருள் சேரும். கலக்கமான மனநிலை காணப்படும். கண்ணாடிப் பொருட்கள் சேதம் தரும். அணிகலன் சேர்க்கை ஏற்படும். புதிய சிந்தனை உதயமா-கும். சேமிப்பு அதிகரிக்கும். கலைஞர்களுக்கு திருப்புமுனையான காலம். தொழிலில் ரகசியம் காப்பது நல்லது. பணியில் மாற்றம் ஏற்படும். முயற்சியில் வளர்ச்சியடையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். நல்லச்செய்திகள் நாடி வரும். குடும்ப அன்யோன்யம் சிறக்கும். செல்வாக்கு உயரும். வீடு தேடி வெற்றி வரும். ஆழமான மேன்மைகள் தொடரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். சந்தோஷம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அனுமன் அதிர்ஷ்ட எண்: 3, 9, 7, 2 அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை) அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I, P

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னாரில் பல்வேறு சுமைகளையும் துன்பங்களையும் மனதில் சுமந்து வாழும் வயோதிபர்களை மகிழ்விக்க முன்னெடுக்கப்பட்ட "ஒளி விழா"!

மன்னார் நிருபர்



- எஸ்.ஆர்.லெம்பேட் (22-12-2025)

மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் ஏற்பாடு செய்த ஒளி விழா நிகழ்வு 22ம் திகதி அன்றைய தினம் திங்கட்கிழமை (22-12-2025) மாலை மன்னார் பட்டி தோட்டத்தில் அமைந்துள்ள வயோதிபர் இல்லத்தில் இடம்பெற்றது.

மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஒஸ்மன் டெனி தலைமையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் விருந்தினராக மன்னார் மறைமாவட்ட ஓய்வு நிலை ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ கலந்து கொண்டார்.

ஓய்வு நிலை ஆயர் தலைமையில் குறித்த வயோதிபர் இல்லத்தில் விசேட திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து ஒளி விழா நிகழ்வுகள் இடம் பெற்றது.மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை அலுவலகர்கள் இணைந்து ஒளி விழா நிகழ்வை முன்னெடுத்தனர். குறித்த வயோதிபர் இல்லத்தில் உள்ள வயோதிபர்களை மகிழ்விக்கும் வகையில் கரோல் பாடல்களும் இசைக்கப்பட்டது.

இதன் போது குறித்த வயோதிபர் இல்லத்தில் உள்ள வயோதிபர்கள் ஆடல்,பாடல்களில் ஈடுபட்டனர்.இதனை தொடர்ந்து வயோதிபர்களுக்கு ஓய்வு நிலை ஆயர் மற்றும் எழுத்தூர் பங்குத்தந்தை லோரன்ஸ் அடிகளார் ஆகியோர் இணைந்து அன்பளிப்பு பொருட்களையும் வழங்கி வைத்தனர்.

நாடு பூராகவும் அண்மையில் ஏற்பட்ட புயல் மற்றும் வெள்ளம் காரணமாக மக்கள் மிகவும் பாதிப்பு அடைந்துள்ள நிலையில் இவ்வருடம் மன்னார் மறைமாவட்ட பங்குகளில் ஒளி விழாவை நடத்தாது அதற்கான செலவுகளை பாதிப்புக்கு உள்ளாகியுள்ள மக்களுக்கு பகிர்ந்து அளிக்குமாறு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை அறிவுறுத்தி உள்ளார்.

இந்த நிலையில் பல்வேறு சுமைகளையும் துன்பங்களையும் மனதில் சுமந்த நிலையில் குறித்த வயோதிபர் இல்லத்தில் வசித்து வருகின்ற வயோதிபர்களை மகிழ்விக்கும் வகையில் மாந்தை மேற்கு சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை குறித்த ஒளி விழா நிகழ்வை முன்னெடுத்தமை சிறப்புக்குறிய விடயமாகும்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை அதிகாரிகள் தேடிச் செல்ல வேண்டும் என உத்தரவு பிறப்பித்துள்ள வடக்கு மாகாண ஆளுநர்!

பு. கஜிந்தன்



வெள்ளத்தில் தனது உடைமைகளையும் வாழ்வாதாரத்தையும் இழந்த ஒருவரால் அதிகாரிகளைத் தேடி அலுவலகங்களுக்கு அலைந்து திரிய முடியாது. எனவே, அதிகாரிகளே அந்த மக்களைத் தேடிச் சென்று விவரங்களைச் சேகரிக்க வேண்டும், என வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார்.

அத்துடன், பொதுமக்கள் தமது விவசாயம் மற்றும் கால்நடை வளர்ப்பு உள்ளிட்ட தொழில் முயற்சிகளைப் பதிவு செய்வதில் காட்டும் அக்கறையின்மையே, அனர்த்தங்களின் போது அவர்களுக்குரிய நிவாரணங்கள் கிடைப்பதில் சிக்கல்களை ஏற்படுத்துவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்கு மாகாண சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனப் பிரதிநிதிகள், இயற்கைப் பேரிடரால் தமது சங்கம் எதிர்கொண்டிருக்கும் சவால்கள் குறித்து ஆளுநருடன் இன்று (22) திங்கட்கிழமை மேற்கொண்ட கலந்துரையாடலின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"எமது மக்களிடம் ஒரு மிகப் பெரிய குறைபாடு உள்ளது. அவர்கள் விவசாயம், கால்நடை உள்ளிட்ட தங்கள் தொழில் முயற்சிகளை அரச கட்டமைப்புக்குள் பதிவு செய்வதில் போதிய அக்கறை காட்டுவதில்லை. இந்த அக்கறையின்மை, தற்போது ஏற்பட்டுள்ள இயற்கைப் பேரிடர் போன்ற சந்தர்ப்பங்களில் அரசாங்கத்தால் வழங்கப்படும் இழப்பீடுகள் மற்றும் நிவாரணங்களைப் பெற்றுக்கொள்வதில் அவர்களுக்குப் பாதகமான நிலையை ஏற்படுத்தியுள்ளது. நடந்தவற்றை ஒரு பாடமாக எடுத்துக்கொண்டு, இப்போதாவது மக்கள் தங்கள் தொழில் முயற்சிகளை முறையாகப் பதிவு செய்ய வேண்டும்," என்று கேட்டுக்கொண்டார்.



நிவாரணப் பணிகளில் அதிகாரிகளின் செயற்பாடுகள் குறித்துப் பேசிய ஆளுநர், "எமது அதிகாரிகள் பலர், ஏழைகளுக்கு உதவ வேண்டும் என்ற மனிதாபிமானப் பார்வையைக் கொண்டிருக்கவில்லை. "சுற்றறிக்கைகளில் இல்லைத்தானே, நாம் ஏன் உதவ வேண்டும்?" என்ற ரீதியிலேயே செயற்படுகிறார்கள். இதனால்தான் ஏழைகள் இன்னும் ஏழைகளாகவே இருக்கிறார்கள்.

பாதிக்கப்பட்ட மக்கள் விவரம் தந்தால் பதிவு செய்வோம், தராவிட்டால் விட்டுவிடுவோம் என்று அலுவலகத்தில் இருந்து கொண்டு அதிகாரிகள் செயற்பட முடியாது. அழிவுகளைச் சந்தித்த மக்கள் அந்தத் துயர மனநிலையிலும், இழப்புக்கள் குறித்த கவலையிலும்தான் இருப்பார்கள். இதனைப் புரிந்து கொண்டு, அதிகாரிகளே களத்துக்குச் சென்று தகவல்களைத் திரட்ட வேண்டும். இது குறித்துத் தகுந்த அறிவுறுத்தல்களை நான் வழங்கியுள்ளேன், என்று ஆளுநர் தெரிவித்தார்.

இக்கலந்துரையாடலில் ஆளுநரின் இணைப்புச் செயலாளர்கள் மற்றும் சம்மேளனங்களின் மாவட்டப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

# பாதிக்கப்பட்ட மலையக மக்களுக்கு ஆதரவுக் கரம் நீட்டிய யாழ்ப்பாண. இளைஞர்களின் முன்மாதிரியான செயலால் குவியும் பாராட்டுக்கள்!



அண்மையில் இடம்பெற்ற டித்வா புயலின் கோர தாண்டவத்தால் மலையக மக்கள் பாரிய இழப்புகளை எதிர்நோக்கியுள்ளனர். இன்றுவரை அவர்களது இழப்புகள் முழுமையாக ஈடு செய்யப்படவில்லை.

இந்நிலையில் யாழ்ப்பாணத்தில் இயங்கும் விதையனைத்தும் விருட்சமே செயற்றிட்டத்தினூடாக, யாழ்ப்பாண. இளைஞர்களால் மலையக மக்களுக்கு பெருவாரியான உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.

15 இலட்சத்து 60ஆயிரம் ரூபா நிதியில், ஆடைகள், உலருணவுப் பொதிகள் என்பன 246 குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.



யாழ். இளைஞர்களின் இந்த முன்மாதிரியான செயலை பலரும் பாராட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# குடும்ப சுமை காரணமாக பாஷையூருக்கு வேலைக்கு சென்ற விசுவமடுவைச் சேர்ந்த சிறுவன் மீது சுவர் விழுந்ததால் பலி!

யாழ்ப்பாணம் பாசையூரில் வீட்டினை இடித்துக்கொண்டிருந்த சிறுவன்மீது சுவர் விழுந்து உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. முல்லைத்தீவு - விசுவமடுவைச் சேர்ந்த ரவிச்சந்திரன் டிலக்சன் (வயது 17) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இது குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த சிறுவன் குடும்ப வறுமை காரணமாக வேலைக்குச் சென்று கடந்த 20ம் திகதி சனிக்கிழமை அன்று குருநகர் - பாஷையூரில் பழைய வீட்டினை இடித்துக்கொண்டிருந்தார். ஒரு பக்க சுவரினை இடித்துவிட்டு அந்த சுவர் விழப்போகின்றது என அறையின் உள்ளே ஓடினார்.


இதன்போது மற்றைய சுவர் அவர்மீது விழுந்ததில் சம்பவம் நடந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளார். அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார்.



# தேசிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் — ரஜீவன் தனது அரசியல் பயணத்தில் விரக்தியடைந்துள்ளாரா?

## எம்பி பதவியை ராஜினாமா செய்யவுள்ளதாக தனது முகநூலில் பதிவிட்டுள்ளார்?

மக்களுக்கு உதவ முடியவில்லை என்றால் நான் விரைவில் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்கிறேன் என யாழ்ப்பாணமாவட்ட தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி தெரிவித்துள்ளார். என அறியப்பெறுகின்றது.



தனது உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் இதனை தெரிவித்துள்ளார். அந்த பதிவில் மேலும், பாராளுமன்ற உறுப்பினராக எனக்குள்ள உரிமைகளையும் கடமைகளையும் பாவித்து வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவச் சொல்லி பல அரச அதிகாரிகளை கெஞ்சிக் கேட்டேன். பலர் உதவினார்கள். சிலர் உதவவே இல்லை. அதனை மன்னிக்க முடியாது.

அப்படியானவர்கள் தங்கள் பதவியை உறுதிப்படுத்த பாடுபட்டார்களே தவிர மக்களுக்கு உதவவில்லை. உரிய விசாரணை நடத்தி பாதிக்கப்பட்ட மக்களுக்கு தீர்வை வழங்குவேன்.

மக்களுக்கு உதவ முடியவில்லை என்றால் நான் நிச்சயமாக பாராளுமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்கிறேன். எனக்கு உதவ ஆயிரம் வழிகள் உண்டு. அதே போன்று அதிகாரம் உள்ள யாரும் மக்களுக்கு நல்லது செய்ய பின் நிற்க கூடாது என குறிப்பிட்டுள்ளார்.

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND · INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal



CALL US

# NESAN
# 416-908-5656

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

WE DEAL WITH ALL BANKS

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8











26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்

இவ்விடத்தில் விளம்பரம்
செய்ய எங்களுடன்
தொடர்பு கொள்ளவும்.
416 752 1524

உதயம் 1551 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday December 26, 2025

# அமெரிக்காவிற்கான கனடாவின் புதிய தூதுவராக தனது நண்பரான ஒருவரை நியமனம் செய்துள்ள பிரதமர் மார்க் கார்னி





அமெரிக்காவிற்கான கனடாவின் புதிய தூதுவராக தனது நண்பரான மார்க் வைஸ்மேன் என்பவரை நியமனம் செய்துள்ள பிரதமர் மார்க் கார்னி அவர் 2026ம் ஆண்டு பிப்ரவரி 15 ஆம் தேதி இந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்வார் என்றும் மார்க் வைஸ்மேன், கண்டத் தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை மறுஆய்வு செய்வது குறித்து அமெரிக்காவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்துவார் என்றும் மேலும் தெரிவித்துள்ளார்.

பிரதமர் மார்க் கார்னி அவர்கள் லிபரல் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப்பெற்ற பின்னர் பல நண்பர்களை அவர்கள் அரசியல் அனுபவம் இல்லாதவர்கள் என்பதைத் தெரிந்திருந்தும் பொதுத் தேர்தலில் போட்டியிட நிறுத்தினார் என்ற விமர்சனமும் அந்த நாட்களிலேயே எழத் தொடங்கியது.

அந்த வரிசையில் தற்போது அமெரிக்காவிற்கான கனடாவின் தூதுவராக நியமனம் செய்யப்பெற்றுள்ள வைஸ்மேன் பிரதமர் மார்க் கார்னியின் நீண்டகால நண்பர் என்றும் அவர் மார்க் கார்னியின் லிபரல் தலைமைத்துவ போட்டியில முதலில் பங்களித்தவர்களில் ஒருவர் என்றும், கடந்த பொதுத் தேர்தலின் போது தேர்தல் பிரச்சாரத்திற்கு அதிகபட்சமாக கூ1,750 மற்றும் லிபரல் கட்சிக்கு கூ1,750 நன்கொடையும் அளித்தார் என கனடிய தேசிய ஊடகங்கள் கருத்துத் தெரிவித்துள்ளன.

(தொடர்ச்சி 11ம் பக்கம்)



# தேசியத்திற்கான கூட்டா? தேர்தலுக்கான கூட்டா?

“தமிழரசுக்கட்சியின் சர்வாதிகாரத்தின் கீழ் தொடர்ந்தும் இருக்க முடியாதெனக்கூறி தமிழ் தேசியக்கூட்டமைப்பை உடைத்து வெளியேறி,ஜனாதிபதித் தேர்தலில் தமிழரசுக்கு எதிராக பொது வேட்பாளரை ஆதரித்தும் பாராளுமன்றத்தேர்தலில் தனித்தும் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் சபைகளில் ஆட்சியமைக்க தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடன் கூட்டு வைத்தும் நேரத்திற்கேற்ப கொள்கை மாறிய ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டணி தற்போது மீண்டும் தமிழரசுக்கட்சியுடன் சங்கமித்துள்ளமை நிச்சயம் தமிழ் தேசியதற்கானதாக இருக்க முடியாது““-
-----கே.பாலா

------------------------------------------------------------------ (தொடர்ச்சி 13ம் பக்கம்)

# புயலுக்குப் பின்னரான ஒரு போராட்டம் ?

## – யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்!




தையிட்டி விகாரை சட்டவிரோதமானது என்று ஒரு தீர்மானத்தை வலிகாமம் வடக்கு பிரதேச சபை அண்மையில் எடுத்திருந்தது. அது சட்டவிரோதமான ஒரு விகாரை என்பதனை மூன்று மொழிக-ளிலும் எழுதி அங்கே காட்சிப்படுத்த வேண்டும் என்றும் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது.மேலும் அந்த விகாரையின் அதிபதிக்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் பதவி உயர்வு ஒன்று வழங்கப்பட இருப்பதாக வந்த செய்திகளின் அடிப்படையில் அந்த நாளில் அந்த விகாரைக்கு எதிராக ஒரு போராட்டத்தில் நடாத்துவதற்கு வலி வடக்கு பிரதேச சபை முடிவெடுத்தது. அந்த அடிப்படையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை அங்கே ஒரு போராட்டம்

(தொடர்ச்சி 8ம் பக்கம்)

# ஒன்ராறியோவில் 17 வயதான தமிழ் இளைஞன் ருகேஷ் வாகீசனுக்கு கனடாவின் உயரிய ‘Howard Bar’ தலைமைத்துவ விருது!

கனடாவில் மிக உயரிய **‘Howard Bar’** விருது 17 வயதான ருகேஷ் வாகீசனுக்கு வழங்கப்பட்டுள்ளது. ஒன்றாரியோவில் 500 இராணுவ ஊயனநவளகளில் இருந்து 13 பேர் மட்டுமே இந்த உயரிய விருதிற்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இதில் ருகேஷ் மட்டுமே தமிழ்ச் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பது பெருமைக்குரிய விடயமாகும். (தொடர்ச்சி 4ம் பக்கம்)



